வழமையான
அட்டவணையில்
சகல வகுப்புக்களும்
ஒழுங்காக
நடைபெறுகின்றன.
(எமது வழமையான
ஆசிரியர் குழுவினுல்)
New Master
INSTITUTE
241, Navalar Road
Jaffna.
Monday & Saturday

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

மாணவர்களுக்காக
எமது நிறுவனம்
241, நாவலர் வீதியில்
(புகையிரதக்கடவைக்கு
அருகில்)
New Master
INSTITUTE
Jaffna
Monday & Saturday
திங்கள், சனி

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸு வைகாசி மீ 23 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 08 (06-06 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:- 19

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த

# 3,000 இளைஞர் பூஸாவுக்கு;

# அவர்களில் 2,000 பேர் குறித்து விவரம் இல்லை!

## பிள்ளைகளை மீட்டுத் தருமாறு அரச அதிகாரிகள் குழுவிடம் தாய்மார் கதறி அழுதனர்

—அலுவலகச் செய்தியாளர்கள்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை, எஸ். ஜோண்சன்—

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமராட்சியில் கடந்த பத்து நாட்களில் சுமார் 3,000 தமிழ் இளைஞர்களை ஆயுதப்படையினர் கைது செய்தனர். அவர்கள் அனைவரும் பூஸா இராணுவத் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

யாழ் அரச அதிபர் தலைமையில் சென்ற சிவில் அதிகாரிகள் குழுவுக்குப் பொது மக்களால் இந்தகவல் தெரிவிக்கப்பட்டது.


ஆனல் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பற்றிய விவரம் எதுவும் தம்மிடம் இல்லை என்று இராணுவ அதிகாரிகள் அரச அதிபர் குழுவிடம் கையை விரித்து விட்டனர்.

ஆயுதப் படைகளினுல் கைது செய்யப்பட்ட 3 ஆயிரம் இளைஞர்களில் ஆயிரம் பேரின் விவரங்கள் மட்டுமே பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்களிடம் உண்டு. மிகுதி 2 ஆயிரம் இளைஞர்கள் பற்றிய விவரம் எதுவும் தெரியாது.

அரச அதிபர் குழுவைக் கண்டதும், வடமராட்சித் தாய்மார்கள் தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கதறி அழுது கேட்டனர்.

தமக்கு வீடு வாசல், உணவு வேண்டாம்;

(6 ஆம் பக்கம் பார்க்க)




### செய்திச் சாரம்

#### பாகிஸ்தான் அதிர்ச்சி!

இஸ்லாமாபாத், ஜூன் 6

இலங்கை ஆகாயப் பிராந்தியத்தினுள் இந்தியவிமானங்கள் ஊடுருவிச் சென்ற செயல் குறித்து அதிர்ச்சி அடைந்துள்ளதாக பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

இத்தகவலை பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

#### கனடா கவலை

ஒட்டாவா, ஜூன் 5

இலங்கையில் அதிகரித்து வரும் வன்செயல்கள் குறித்து கனடிய வெளிநாட்டமைச்சர் ஜோ கிளார்க் கவலை தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கிருர். (உ-எ)

#### ராஜீவுக்கு பாராட்டு

ஹராரே, ஜூன் 5

சிம்பாப்வேயில் உள்ள இலங்கைத் தமிழர், பிரதமர் ராஜீவ் காந்திக்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இலங்கைத் தமிழரைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்து வருவதற்காக இப்பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

#### புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூன் 6

இலங்கையில் நடைபெறும் இனக்கொலையைக் கண்டித்து இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவுத் தொண்டர்கள் நேற்று புதுடில்லியில் இலங்கைத் தூதரகத்துக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முடிவில் ஜனுதிபதி ஜெயவர்த்தனுவிடம் கையளிப்பதற்காக மகஜர் ஒன்று இலங்கைத் தூதரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (உ-எ)

#### ரம்பாலுக்கும் விளக்கம்

புதுடில்லி, ஜூன் 5

இந்திய விமானங்களின் யாழ் நிவாரணப் பணி குறித்து பொதுநலவாய அமைப்பு நாடுகள் ஒன்றியப் பொதுச் செயலாளர் ஸ்ரீதத் ரம்பாலுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

இணை அமைச்சர் நட்வர்சிங் அவருடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பணியின் பின்னணியை விளக்கினுர்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதர்களுக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

#### நாய்கள் இழுக்கும் பிரேதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வல்லைவெளியில் இரு பிரேதங்களை நாய்கள் இழுத்துச் சென்றதை அரச உயர் அதிகாரிகள் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

நேற்று வடமராட்சி பகுதியைப் பார்வையிடச் சென்ற அரச அதிபர் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவிற்கே இந்த அதிர்ச்சிக் காட்சி தென்பட்டதாம். (உ-ள-7)

#### காங்கேசனில் கண்ணிவெடி

யாழ்ப்பாணம், ஜூன் 6

காங்கேசன்துறையில் இருந்து பலாலி நோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று பிற்பகல் 2-15 மணியளவில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலினுல் இராணுவ தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற வீதியில் இரத்தக் கறைகளும் சிதைவடைந்தசிருடைகளும் காணப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

#### கொமாண்டோக்கள் 15 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 6

கடந்த புதனன்று மதியம் மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியிலுள்ள பாலையடி வெட்டை என்ற இடத்தில் நடந்தும் ஜீப்பிலும் வந்த கொமாண்டோக்களுக்கு எதிராக புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப்பில் வந்தவர்களில் 11 பேரும் நடந்து வந்தவர்களில் 4 பேருமாக மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டனர். ஜீப்பும் முற்ருக சேதமடைந்தது—இப்படி புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ)

#### ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்றுக் காலை 10 மணி அளவில் ஷெல் தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக இரண்டு பேர் காயமடைந்தனர். (உ-10)

#### பஸ் நிலையம் பழைய இடத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 6

வட பிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலையின் சகல பஸ்களும் இன்றுமுதல் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக குருநாதர் ஆலய முன்றலிலும், ஆரியகுளம் சந்தியில் இருந்தும் இப்போக்குவரத்துகள் நடைபெற்றன (உ-10)

#### அமைச்சர் குழு வடக்கில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தலைமையில் வந்த அமைச்சர் குழுவினர் வடமராட்சிப் பகுதியை நேற்று சுற்றிப் பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர் வடமராட்சிப் பகுதியில் உள்ள பிரசைகள் குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையும் நடத்தினர்.

அமைச்சர் குழுவில் உணவுத்துறை அமைச்சர்காமினி ஜெயசூரியா, சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து, புனர்வாழ்வுத்துறை அமைச்சர் லயனல் ஜெயதிலக்க ஆகியோரும் இடம் பெற்றனர். (உ-ள-7)

## இலங்கை அரசு ஐ. நாவில் முறையீடு

கொழும்பு, ஜூன் 6

தனது ஆகாயப் பிராந்தியத்தினுள் இந்திய விமானங்கள் ஊடுருவிய செயல் குறித்து இலங்கை உத்தியோகபூர்வமாக ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கு முறையிட்டிருக்கிறது.

வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவின் உத்தரவைத் தொடர்ந்து, இலங்கையின் ஐ. நா. நிரந்தரப் பிரதிநிதி திரு. நிசங்கா விஜயவர்த்தனு உத்தியோகபூர்வமுறைப்பாட்டைக் கடந்த வியாழன் சமர்ப்பித்தார்.

இந்திய விமானங்களை தடுக்க இலங்கை விமானப்படை முற்பட்டால் பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய விமானப்படை எச்சரிக்கை விடுத்தது குறித்தும் ஐ. நா. பொதுச் செயலாளரிடம் தெரிவிக்கும்படி இலங்கை அரசு, தனது ஐ. நா.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிலைப்பாட்டை ரஷ்யத் தலைவர் ஏற்பு

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டை ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஏற்றுக் கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன் திரு. கோர்பச்சேவை, இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி கிரெம்ளினில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போதே திரு. கோர்பச்சேவ் இந்திய நிலைப்பாடு குறித்து திருப்தி தெரிவித்தார் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## நட்புநாடு ஒன்றின் பாதுகாப்பு உதவியை இலங்கை நாடுகிறது

கொழும்பு, ஜூன் 6

இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்தைப் பாதுகாக்க அதன் தெற்காசிய நட்புநாடு ஒன்று முன்வரலாம்.

அதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதாக கொழும்பில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய விமானங்கள் நிவாரணப் பொருள்களை யாழ் குடாவில் கடந்த வியாழன் தரையிறக்கிச் சென்றன அல்லவா?

அதைத் தொடர்ந்தே நட்பு நாடு ஒன்றின் உதவி நாடப்பட்டு இருப்பதாக அந்த அரச அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ)

## 20 தமிழர்கள் உயிருடன் எரிப்பு

### தம்பலகமத்தில் சம்பவம்

சென்னை, ஜூன் 6

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் கிராமத்தில் 20க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர் இராணுவத்தினரால் உயிருடன் கொளுத்தப்பட்டு எரிக்கப்பட்டனர்.

- இப்படி போராளி அமைப்பு ஒன்று தெரிவித்ததாக இந்திய வானெலி நேற்று மாலை அறிவித்தது.

இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகள் போட்டதைச் சகித்துக் கொள்ள முடியாதபடையினர் இந்த அக்கிரமத்தைச்செய்ததாக போராளிகளின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க மறுப்பு

இலங்கை- இந்திய பதற்றம் நீங்கும் வரை பாக்குநீரிணையில் மீன்பிடிக்கச் செல்வதில்லை

-இப்படி ராமேஸ்வரம் மீனவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

ஏழாவது தினமாக ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றும் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

இலங்கைக் கடற்படையினர் தாக்குவர் என்ற அச்சம் காரணமாக அவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. (உ-எ)

## நிதானத்துடன் நடக்க ஐ. நா. செயலர் கோரிக்கை

வாஷிங்டன், ஜூன் 6

இந்தியாவும் இலங்கையும் நிதானத்துடன் நடந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

— இப்படி ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ் டி குயிலர் கேட்டுக்கொண்டு இருக்கிருர்.

இந்திய - இலங்கை பதற்ற நிலைமை குறித்து பொதுச்செயலாளர் நேற்று அறிக்கையொன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இனப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணக்கூடிய வாய்ப்பு இன்னமும் இருக்கின்றது என்று தான் தொடர்ந்து நம்புவதாகஅவர் மேலும் தெரிவித்திருக்கின்ருர்.

இதனிடையில் இந்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

#### சிப்பாய்கள் சைக்கிள் பவனி

காங்கேசன்துறை, ஜூன் 6

பலாலியிலிருந்து நேற்றுக்காலை காங்கேசன்துறைக்கு வழமைக்கு மாருக இராணுவத்தினர் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் வந்ததால்பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வடமராட்சியில் வீடுகளிலிருந்து கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் பலாலிக்கு எடுத்து வரப்பட்டதாகவும்—

அவையே பலாலி இராணுவத்தினரால் தற்போது பாவிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (உ-68)

### சுபநேரம்

06-06-1987

சனிக்கிழமை

சுபநேரம்:-
2.52 முதல் 4.22 வரை
ராகுகாலம்:-
8.52 முதல்10-22 வரை.

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும். நவமி முற்பகல் 9-54 வரை.

## பிணக்கைத் தீர்க்க 'சார்க்' அமைப்பிற்கு அதிகாரம் இல்லை!

கொழும்பு, ஜூன் 6

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணக்கை விசாரிக்க சார்க் அமைப்புக்கு அதிகாரம் உண்டா?

அமைப்பின் விசேட கூட்டத்தை கூட்டும்படி பிரதமர் பிரேமதாச வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து ராஜதந்திர வட்டாரங்களில் இக்கேள்வி எழுந்துள்ளது.

சார்க் அமைப்பில் இந்தியா, இலங்கை, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

சார்க் அமைப்பின் சட்டதிட்டங்களின் படி அமைப்பில் உள்ள இரண்டு நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகளை'சார்க் அமைப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

#### இந்திய பத்திரிகைகள் வரவேற்பு

புதுடில்லி, ஜூன் 6

விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள் விநியோகம் செய்த இந்தியப் பிரதமரின் நடவடிக்கையை இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற ஆங்கில நாளிதழ்கள் பல வரவேற்றுள்ளன.

குடாநாட்டுக்கு

## நிவாரண உதவி பற்றி ஆராய இலங்கைக்கு இந்தியா அழைப்பு

### நட்வர்சிங் தகவல்

புதுடில்லி, ஜூன் 6

யாழ்குடா நாட்டுத் தமிழருக்கு நிவாரணம் வழங்குவது பற்றிய வழிமுறைகள் குறித்து பேச்சுக்கள் நடத்த இலங்கை அரசிடம் இருந்து பதிலை இந்தியா எதிர்பார்க்கின்றது.

இப்படி இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங் நேற்று மாலை புதுடில்லியில் செய்தியாளர்களுடன் உரையாடுகையில் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என்று நான் நம்புகின்றேன்.

டிசம்பர் 19 யோசனைகள் பேச்சுக்களுக்கான நல்ல அடிப்படையாக இருக்க முடியும் என்றும் நான் நம்புகின்றேன்.

இரு நாடுகளின் பிரச்சினைகள் குறித்து சார்க் அமைப்பு விவாதிக்க முடியாது.

எப்படியாயினும் சார்க் அமைப்பின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்

(6 ஆம் பக்கம் பார்க்க)




நட்வர்சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இத

# தலதா மாளிகைக்குப் பாதுகாப்பு; எங்கள் ஆதீனத்தின் மீது குண்டு வீச்சு!



எனதுஉடல்,உயிர், உடைமை என்பவற்றை முற்றாக சைவத்துக்கும் தமிழுக்கும், சமுதாயத்துக்கும் தொண்டுசெய்ய அர்ப்பணித்துவிட்டேன். 'தன்கடன் அடியேனையுந் தாங்குதல். என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பரின் வாக்குப்படி யான் வாழ்ந்து வருகிறேன்.

என் செயலாவது யாதொன்றும் இல்லை. யாவும் அவன் செயலே.

—சூட்டுக் காயத்துக்கு உள்ளாகி, காயத்துடன் ஓய்வெடுத்துக்கொண்டு இருக்கும் நல்லூர் ஆதீன முதல்வர் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் இப்படி சஞ்சீவிக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டார்.

தொல்லை வினை தீர்க்கும் நல்லை நகரிலே சைவம் வளர்க்கும் பெருநோக்குடன் தொண்டு செய்வதற்கென்றே நிறுவப்பட்டதுதான் நல்லை ஆதீனம். இந்து சமய கலாசாரத்தை அடிப்படையாக வைத்து பாரம்பரியத்தைப் பேணிக்காத்துப் பெருந்தொண்டுபுரிகின்ற இந்த ஆதீனமும் அரசாங்கப் படையினரால் அசுரத்தனமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆதீன மண்டபம் முழுவதும் சன்னம் துளைத்த துவாரங்கள் காணப்படுகின்றன. உள்ளே நின்று பார்த்தால் காண்டீபனின் கணைபட்ட இடம் போல் ஆங்காங்கே உடைந்து துளைகள் வந்துள்ளன.

அரச படையினரின் அடாவடித்தனத்துக்கு அளவேயில்லையா? ஆதீனத்தை அழிக்க முற்பட்டது நிச்சயம் கலாசார ஒழிப்புத் திட்டத்தின் ஓரம்சமே.

இது பெரும் வேதனையையும் கவலையையும் தரும் விஷயமாகும். ஆதீன கர்த்தர் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் மீதும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஹெலி தாக்குதலின்போது படுகாயமடைந்த பரமாசார்ய சுவாமிகளைச் சஞ்சீவிக்காக செவ்வி கண்டோம்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் சூட்டுக் காயத்துக்கு சிகிச்சைபெற்றுப் படுக்கையிலிருந்த சமயம் அவரைச் சந்தித்தேன்.

கேள்வி: விபத்து நடந்த நேரத்தின் நிகழ்வுகள்பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா?

சுவாமிகள்: சரியாகக் காலை 5.45 மணி இருக்கும், நான் பூசைக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். அப்போது வெளியே சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

கதவுகள் முற்ருகத் திறந்திருந்தன. வழக்கமாகப் பூசை காணவருபவர்களும் வந்திருந்தனர். மணி 5.55. திடீரெனக் கூரையைப் பிய்த்துக்கொண்டு வந்த குண்டு எனது இடுப்பைத் துளைத்தது. நான் மயங்கி விட்டேன். சரியான

## கலாசார அழிப்பைக் கண்டிக்கிறுர் காயமுற்ற நல்லை ஆதீன முதல்வர்

குறிபார்த்து எமது ஆதீனம் தாக்கப்பட்டது. கூரைகளும் ஓடுகளும் சிதறி வீழ்ந்தன. சற்றும் எதிர்பாராதவிதத்தில் இத்தாக்குதல் நடந்தது. வேறு எவருக்கும் காயமில்லை.

கேள்வி: சைவ ஆலயங்கள் சேதத்துக்குள்ளானது பற்றித் தங்களது கருத்து என்ன?

சுவாமிகள்: இனப் பிரச்சினை என்ற போர்வையில் இந்த அரசு மத ஒழிப்பும் செய்கிறது. குறிப்பாக வண்ணை வைத்தீஸ்வரன்கோயில், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில்,சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் கலாசாரம் குறிப்பாக ஆலயங்களை மையமாக வைத்தே வளர்ச்சிபெற்றுள்ளது. சைவ சமயக் கோட்பாடுகள் யாவும் ஆலயம் மூலமாகத்தான் மிளிர்கின்றன. ஆகவே தமிழ்இன ஒழிப்புச் செய்யும்போது ஆலயங்களும் அழிக்கப்படவேண்டியனவே என்பது அவர்கள் திட்டம்.

சைவமும் தமிழும் தழைத்தோங்காது மடியவேண்டும் என்ற ஒரே நோக்கோடு ஆலயங்களைத் தாக்கியுள்ளது இந்த அரசு.

இந்தியாவிலேயுள்ள ஆதீனங்களைப்போன்று இலங்கையில் நிறுவப்பட்ட ஒரே ஒரு ஆதீனமானது எங்களது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்தான்.அதுதேமதுரத் தமிழோசை செகமெல்லாம் பரவவேண்டும் என்று முயன்றுவருவது யாவரும் அறிந்ததே.

மத அடிப்படையிற் பார்க்கும்போது பௌத்தர்களுக்குத் தலதா மாளிகை போன்று ஈழம் வாழ் சைவர்களுக்கு நல்லூர் ஆதீனம் புனிதம் வாய்ந்த சமய அமைப்பு.

தலதா மாளிகைக்குப் பாதுகாப்பு; ஆனுல் எங்கள் ஆதீனத்துக்குக் குண்டுவீச்சு.

கேள்வி: இந்த ஆதீனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

சுவாமிகள்: 1966 ஆம் ஆண்டு ஆவணிக்கிருத்திகையிலே ஆரம்பிக்கப்பட்டது. எனது குருநாதர் நல்லைக் குருமணி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள ஒரேஒரு ஆதீனம் இதுவாகும். மத அடிப்படையில் பார்க்கும் போது கண்டியில் தலதா மாளிகை போல இங்கு நல்லூரில் நல்லை ஆதீனம் என்று கூறலாம்.

> அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும். ஆகவே இதற்கு ஒரு தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும்.
> தெய்வநீதி ஒரு போதும் பிழைக்காது.

வேத நெறி தழைத்தோங்க சைவத்துறை விளங்க, பூத பரம்பரை பொலிய புனித வாய் மலர்ந்தழுத திருஞான சம்பந்தரின் பெயரால் இது துவங்கப்பட்டது.

தொண்டுசெய்வதையே பெருநோக்காகக் கொண்டு இந்த ஆதீனத்தினை நடத்தி வருகின்ருேம்.

கேள்வி: உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதும் கூறமுடியுமா?

சுவாமிகள்: என் வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவம் இல்லை இல்லை, மறக்கக்கூடாத சம்பவம் என்று ஒன்று உண்டானுல் அது என் இடுப்பைக் குண்டு துளைத்த இந்தச் சம்பவம்தான். மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழவேண்டும் என்ற நோக்கில் வாழ்பவன் நான். ஆண்டவன் சித்தம் இதுவானுல் நாம் என்ன செய்யமுடியும்? ''எந் தாயுமெனக்கருள் தந்தையும் நீ, சிந்தாகுலமானவை தீர்த்தெனை யான் கந்தா'' என்று வேண்டுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?

இறுதியாக ஒன்றுகூற விரும்புகின்றேன்.சேவை செய்யும் நோக்கில் செயற்பட்டுவரும் இந்த ஆதீனம் அரசபடைகளால் தாக்கப்பட்டது மிகவும் கவலைக்கிடமான ஒன்று. அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும். ஆகவே இதற்கு ஒரு தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும்.

தெய்வநீதி ஒருபோதும் பிழைக்காது.

—இவ்வாறு மனஉறுதி தரும் வாசகத்துடன் சுவாமியின் செவ்வி நிறைவுபெற்றது. ★

-செவ்வி: இராசையா ஸ்ரீதரன்-

## வந்து பொருள்........ தந்த செயல்........ வாய்குளிர வாழ்த்திடுவோம்

நேற்றுவரை நாமெல்லாம் நெஞ்சம் துடித்திருந்தோம்
ஆற்றுவதற்காளில்லாதழுதழுது களைத்திருந்தோம்
ஊற்றுகிற வெந்நீரில் உழலுமொரு புழுப்போல
மாற்றுவழி தெரியாமல் மரணபயம் கொண்டிருந்தோம்.

★ ★ ★ ★

வல்வெட்டித்துறையதுவும் வளமான கரவெட்டி
நெல்லியடி நகரெல்லாம் நேற்றிழந்தோமெனும் சேதி
உள்ளமதை வாட்டிடவே உயிருருகி நாம் நிற்க
வெல்லமென இருசெய்தி வேதனையைத் தீர்த்ததுவே.

★ ★ ★ ★

எங்களிள வேங்கையெலாம் ஏங்கியழும் நம்துயரை
தங்களுயிர் முன்வைத்தே "தகர்த்திட்ட" தனிச்செய்தி
அங்கமெலாம் குளிர்வித்து ஆனந்தத் தேன்சொரிந்து
பொங்கிவரும் ஆனந்தப் புதுப்புனலில் போட்டதுவே.

★ ★ ★ ★

மாவருமா? சீனியொடு மண்ணெண்ணை தான்வருமா?
நாம் வருந்திச் சாகாமல் நல்லவழி தோன்றிடுமா?
நேற்றேடு இக்கேள்வி நெஞ்சத்தில் அகன்றுவிட
ஆற்றுது பாரதத்தாய் அன்போடு பொருள் கொணர்ந்தாள்.

★ ★ ★ ★

வந்த இருசெய்திகளும் வலிமையுடன் மனங்குளிர
தந்த புதுத்தெம்பதனுல் தலைநிமிர்ந்தோம் தலைநிமிர்ந்தோம்
சொந்தமென நம்மவரை சொல்லிவிட்டுப் பாரதத்தாய்
வந்துபொருள் தந்தசெயல் வாய்குளிர வாழ்த்திடுவோம்.

-இ. ஜெயராஜ்-

# தமிழர்கள் அனுதைப்பிணங்களாக மாறிய பரிதாபம்; ஒரு வாரம் பசிதீர்க்க அமுதாக உதவியது தண்ணீர்

இலங்கையின் தலை யாழ் குடா; அதன் மூளை வடமராட்சி. இவ்வாறு, அன்று ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரியால் வர்ணிக்கப்பட்ட அந்த வடமராட்சி இன்று-?

வரிந்து கட்டிக் கொண்டு அரசு நடத்திய போரில், எரிந்து முடிந்த எண்ணைக் குதம் போல் காட்சியளிக்கின்றது.

குடா நாடெங்கணும் ஊரடங்கு தவியுடன் 6பொம்மர்கள்,9 ஹெலி, 12 பீரங்கிப்படகுகள், 2சிபிளேன்கள்,3அவ்ரோ விமானங்கள், 127 வாகனங்கள், 6000 துருப்புக்கள் வேள்வி நடத்தி இருந்தன.

இருபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உறவுகள், உடைமைகள், இழந்து அகதிகளாகியுள்ளனர்.

அவர்கள் கூறிய கதைகள் கல்மனதையும் கரையவைக்கும்.

ஒன்ரு; இரண்டா; அவற்றில் எவற்றைக் கூறுவது?

வீடமைப்பு ஆண்டில் அரசு வீடெரிப்புவாரம் கொண்டாடியதைக் கூறவா?

சர்வதேச சிறுவர் தினமான மே. 31 இல் பச்சிளம் பாலகர்களைப் பட்டினிபோட்டு பரிதவிக்க விட்ட கதை கூறவா?

சிப்பாய்களை ஏற்றி வரும் அவ்ரோ, பீப்பாய்களை ஏற்றிவந்து ஊர்களையெல்லாம் சுடுகாடாக்கியதைச் சொல்வதா?

ஊரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறேன் என்று, உணவுத் தட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததைச் சொல்வதா?

அதனுல் மக்கள் வெறும் நீரை மட்டும் பருகிக்கிடந்ததையா, அனுதைப் பிணங்கள் போல் ஆங்காங்கே கருகிக்கிடந்ததையா, எதைக்கூறுவது?

கண்ணீர்க் கடலிலிருந்து சில துளிகளை மட்டும் தருகின்ருேம்.

வதிரியிலுள்ள பத்தியவத்தை கிராம மக்கள் வறுமைக் கோட்டுக்கு அண்மையில் உள்ளவர்கள். 26ஆம் திகதி காலை ஓர் ஆட்டிலறி ஷெல் தொண்டமானுறு முகாமிலிருந்து ஏவப்பட்டு கிராமத்தில் வந்து விழுந்தது.

விழுந்தது, விதிவசத்தால் வீடுகளுக்குமேல் விழவில்லை.

சுந்தரலிங்கம் என்பவரது குடிசைக்கு அருகில் உள்ள பனையில் விழுந்து பனையை முறித்தது.

தொடர்ந்து ஏகப்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

சுந்தரலிங்கம் தனது மனைவி, நான்கு பிள்ளைகளையும்கூட்டிக்கொண்டு அல்வாயிலுள்ள ஓர் கல் வீட்டில் தஞ்சம் புகுந்தார்.

அங்கே இன்னும் நூறு பேர்வரை இருந்தனர்.

தொடர்ந்து இரண்டு நாட்களாக ஷெல் அடிகள் இடம்பெற்றன.

போதாக்குறைக்குப் பொம்மர்களும், சிபிளேன்களும், ஹெலிகளும் கூடவந்து தாக்கின.

இரண்டு நாட்களும் வெடியோசை இடியோசைபோலத்தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தது.

இரண்டு நாட்களும் வெறும் தண்ணீர் மட்டுமே குடித்துக் குடலை நிரப்பினர்.

வயதானவர்களால் பசியைப் பொறுத்துக் கொள்ளமுடியும், பச்சிளம் பாலகர்களால் முடியுமா? அவை தவிப்பதைத்தான் தாய் தந்தையரால் பார்க்கமுடியுமா?

குழந்தைகளின் குடலை நிரப்ப குண்டடிக்கும் பயப்படாது தனது வீட்டை நோக்கி, பதுங்கிப் பதுங்கிச் சென்ருர் சுந்தரலிங்கம்.

28 ஆம் திகதி காலை, இருநாட்களின்பின் வீட்டையும், அரிசியையும் கண்டார்.

அவற்றேடு வீட்டின் மேல் ஹெலி, பொம்மர் சுற்றக்கண்டார், கிலி கொண்டார்.

உயிரைக் கையில் பிடித்தபடி காலை 5மணி முதல் மாலை 5மணிவரை மேசை ஒன்றின் கீழ் குந்தியிருந்தார்.

இருட்டத் தொடங்கியதும் மெதுவாக மனைவி பிள்ளைகள் இருந்த இடத்தை நோக்கிச் சென்ருர்.

வழியெங்கும் ஊர் சுடுகாடாகியிருந்தது. அல்வாயிலுள்ள உடுப்பிட்டி முன்னுல் எம்.பியின் வீடு உட்பட 10 வீடுகள் வரை பீப்பாய்க் குண்டுகளால் முற்ருக எரிக்கப்பட்டிருந்தன.

ஆங்காங்கே வீடுகளில் இருந்து வெளிப்பட்ட மக்கள் தமது உறவினர்களை இடிபாடுகளின் நடுவே தேடிக்கொண்டிருந்தனர் கண்டுபிடித்தவர்கள் கதறி அழுது கொண்டிருந்தனர்.

தனது மனைவி,பிள்ளைகளை நினைத்தபடி வேகமாக அல்வாயை அடைந்தார் சுந்தரலிங்கம்.

அந்தோ பரிதாபம்... அவரது மனைவி மக்களை விட்டுச்சென்ற வீடு தரைமட்டமாக ஒரு கற்குவியலைப்போல் காட்சி தந்தது. பொம்மர் அதை நாசமாக்கியிருந்தது.

பக்கத்து வீடுகள் பீப்பாய்க்குண்டுகளுக்கு பலியாகி எரிந்து கிடந்தன. மனைவி பிள்ளைகளை வாய்விட்டு அழுதபடி அயல் வீடுகளில் தேடினுர்.

ஒரு வீட்டில் இருந்து அவரது மனைவி இரு பிள்ளைகளுடன் ஓடிவந்து கண்ணீருடன் கட்டி அணைத்தார். மற்றிரு பிள்ளைகளுக்கு [illegible] நடந்ததென்று எவருக்குமே தெரியவில்லை.

பொம்மர் தாக்குதலில் சிதறி ஓடியபோது இரு பிள்ளைகள் எங்கோ வழிதவறிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் அகதிகளாக ஆவரங்கால் வந்தடைந்தனர். அந்த ஐந்து நாட்களும் அவர்கள் உண்டது ஒரு தேங்காயும், ஒரு மாங்காயும் மட்டுமே.

இவ்வாறு தமது கதையைக் கூறிய சுந்தரலிங்கம் வழியில் தமது இரு பிள்ளைகளையும் காண்பேன் எனும் நம்பிக்கையில் காத்துக்கிடக்கின்ருர்.

அல்வாயைச் சேர்ந்த இராமச்சந்திரன் என்பவர் தம் அனுபவத்தை கூறுகையில்—

சுமார் ஆயிரம்பேர் வரையில் பூதக்கரைப் பிள்ளையார் கோவிலில் 29ஆம் திகதி வரை தஞ்சமடைந்திருந்தனர். 3 நாட்களாக வெறும் இலைக்கஞ்சியை மட்டுமே அனைவரும் உண்டனர்.

திடீரென சுமார் இருநூறு சிப்பாய்கள்வரை கோவிலைச் சுற்றிவளைத்தனர். அவர்கள் சத்தமின்றி எப்படி அங்கே வந்துசேர்ந்தனர் என்று எவருக்குமே தெரியாது.

சுற்றிவளைத்த சிப்பாய்கள் 15-30 வயதிற்குட்பட்ட ஆண்களைப் போட்டோ எடுக்கவெனத் தம்முடன் அழைத்துச் சென்றனர். ஏற்கனவே 1500 இளைஞர்கள்தம்முடன் இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

### கெஞ்சிய தாய்மார்

மகன்களைக் கூட்டிச் செல்லும்போது தாய்மார்கள், அவர்களை விடுமாறு கதறி, அழுதபடி, சிப்பாய்களின் கால்களைப் பிடித்துக் கெஞ்சி[illegible] மனக் கண்முன் நின்று கலக்கத்[illegible] என்றுர்.

இராணுவத்தினர் பிடித்துச் சென்றவர்களில் ஒருவர் அவர்களிடமிருந்து தப்பிவந்திருந்தார்.

மணற்காட்டைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அவர் தமது

இவ்வாறு கூறினர் தற்போது தமது காயத்திற்கு மந்திகை வைத்தியசாலையில் மருந்து கட்டியுள்ள அவர்.

### கர்ப்பிணியின் அவலம்

கெருடாவிலிலிருந்து

## வடமராட்சி மக்களின் கண்ணீர்க் கதைகள்

அனுபவத்தைக் கூறுகையில்—

''27 ஆம் திகதி மணற்காட்டில் சிப்பாய்களால் கைதுசெய்யப்பட்டு அலக்கண்டி மினிமுகாமுக்கு கொண்டுசெல்லப் பட்டேன்.

அங்கே சுமார் 400 இளைஞர்கள் வரை கைதாகி இருந்தனர்.

இரண்டு நாட்களாக எந்தவித உணவும் எமக்கு வழங்கப்படவில்லை. உதையும், அடியும், மண்மூடை அடுக்கும் வேலைகளுமே தரப்பட்டன.

பயத்துடனும், பசியுடனும் நாம் வேலைகளைச் செய்தோம்.

மண்மூடைகளை அடுக்கும்போது நாம் சில சமயங்களில் போராளிகளுக்கு அண்மையில் இருந்தோம்.

ஒரு நாள் போராளிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல் ஒன்று எமக்கு அருகே வெடித்து எனது காலைக் காயப்படுத்தியது.

எனது காயத்திற்கு எந்த வித மருந்தும் தரப்படவில்லை.

நண்பர்கள் எனது காலை தமக்கு குடிக்கத் தந்த நீரால் கழுவினர்.

30 ஆம் திகதி இரவு தான் அச்சம்பவம் நடைபெற்றது. அதை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

[illegible] யுடன் முகாமிலிருந்து [illegible] வெளியேறி ஊரையடைந்தேன்.

அகதியாக வந்த ஒருவர் தமது அனுபவத்தைக் கூறுகையில்—

பொம்மர் தாக்குதல்களுக்குப் பயந்து மக்கள் ஊரைவிட்டு ஓடினர்.

தொட்டிலிப்பிள்ளையார் கோவிலடியில் ஓர் ஹெலி இவர்களைத் துரத்திச் சுட்டது.

ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் ஒரு வயோதிபரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை அப்படியே விட்டு விட்டு மக்கள் ஓடினர்.

மறுநாள் அவ்விடத்தே வந்து பார்த்தபோது காயப்பட்டிருந்த கர்ப்பிணியும், வயோதிபரும் கருகிய நிலையில் அடையாளம் தெரியாத நிலையில் காணப்பட்டனர் என்ருர்.

அனேகமான அகதிகளின் கூற்றுப்படி பதுங்கு குழியில் வைத்துப் படையினரின் பார்வையில் பட்டவர்கள் எவரும் உயிருடன் தப்பவில்லை.

வல்வெட்டித்துறை என்று அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டவர்களும் அதிகம் தப்பவில்லை.

நவக்கிரியைச் சேர்ந்த நல்லதம்பி எனும் சுருட்டுத் தொழிலாளி மண்டாளையில் வைத்து சிப்பாய்களால் நையப் புடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

துப்பாக்கி நுனி கூர் முனையால் இடுப்பில் குத்து வாங்கியிருந்தார் அந்த வயோதிபர்.

### "புலி நகம்"

அவர் தமது அனுபவத்தைக் கூறுகையில்— சந்திரன் எனும் 23 வயது இளைஞன் நீளமான நகங்களை வளர்த்து வைத்திருந்தார்.

இவர் மண்டாளையில் ஒரு கடையில் கடமை புரிபவர்.

இவரைக் கைதுசெய்த சிப்பாய்கள் இவரது நகங்கள் புலி நகங்கள் போல் உள்ளதாகக் கூறி தம்முடன் கூட்டிச் சென்றனர் என்ருர்.

அல்வாயைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான விவேகானந்தன் தமது அனுபவத்தைக் கூறுகையில்—

சுமார் 300 பேர்வரை அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்தோம்.

திடீரென 3 பொம்மர்கள் கோவிலை வட்டமிடத் தொடங்கின.

குழந்தைகள், பெண்கள் பீதியால் கதறத் தொடங்கினர்.

திடீரெனப் பலத்த ஓசையுடன் ஒரு குண்டு கோவில் மண்டபத்தின் மேல் விழுந்து வெடித்தது. ஒரே புகைமண்டலமாயும் அவல ஓலமாகவும் இருந்தது.

சுமார் நூறு பேர்வரை காயப்பட்டிருந்தனர். 75 பேர்வரை பலியாகியிருந்தனர்.

காயப்பட்டு ஓடியவர் வழியில் விழுந்து வலியில் துடித்தனர்.

அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. பலரது உடல்களை அங்கேயே காவோலை போட்டுக் கொளுத்தினேம்.

இப்போது ஏதாவது கோவிலைப் பார்த்தால் ஹெலிச் சத்தம் கேட்டால் பயமாக இருக்கிறது என்ருர். ★

தொகுப்பு:- சி. சுந்தரலிங்கம்
எஸ். ஜே. பி. ரட்ணதுரை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 17.10.1918

மறைவு 7.5.1987

திதி. 6.6.1987

### கந்தர் சிவனடியான்

(முன்னுள் இளைப்பாறிய யாழ்/இந்துக்கல்லூரி ஆசிரியர்)

ஆண்டவன் அழைப்பை எதிர்பாராது ஏற்று எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு அகன்று விட்டாய் எங்களை விட்டு! ஏங்கி நிற்கின்ருேம் சுற்றமெல்லாம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்ருேம்.

இப்படிக்கு
மனைவி, மக்கள், மருமக்கள்.


இல.45 கஸ்ரம்ருேட்.
நீர்கொழும்பு.
(1412)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சியை சாம்பல் பூத்த மேடாக மாற்றிய அந்த "ஒப்பரேசன் லிபறேசன்" கொடுமை!







கடந்த 25 ஆம் திகதி குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் விழுந்த ஷெல்லினுல் நெஞ்சுடன் துண்டிக்கப்பட்ட சிறுமியின் சடலத்தையும் சின்னபின்னமான ஆண் ஒருவரின் சடலத்தையும் முதல் இரு படங்களிலும் காணலாம். யாழ்நகரில் விமானத்தாக்குதலால் சேதமடைந்த சில கடைகளை மூன்ருவது படத்தில் காணலாம்.

படங்கள்: சண் ஜோன்சன்

செவ்வாய்க்கிழமை காலை ஆறுமணி. "யாழ்ப்பாண வானெலியில்" யாழ்குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவுகிறது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் "ஒப்பறேசன் லிபறேசன்" வல்வெட்டித்துறையில் ஆரம்பமாகிறது.

இதன் காரணமாகத் தான் கடந்த வாரம் வல்வெட்டித்துறை மீது ஸ்ரீலங்கா படையினர் ஆயுத 'ஒப்பறேசன்' நடத்தினர்.

அந்த "ஒப்பறேசன் லிபறேசன்" கொடுமைகளை அனுபவித்தவர்களிடம் இருந்தும், அதிலிருந்து தப்பியவர்கள் நேரில் கண்டவற்றிலிருந்தும் மனதை அதிர வைக்கும் அட்டூழியங்கள் பலவற்றை அறிய முடிந்தது.

**மக்கள் தஞ்சம்**

செவ்வாய்க்கிழமை 26 ஆம் திகதி:- காலை 5.45 மணிக்கு 12 பொம்மர் விமானங்கள், ஆறு ஹெலிகொப்டர்கள் மூன்று அவ்ரோவிமானங்கள் இரண்டு சீ. பிளேன்கள் நண்பகல் 12.30 மணிவரை வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பொது மக்கள் வாழும் பகுதியை நோக்கி தாக்குதல்கள் நடத்தின.

அன்றைய தினம் மட்டும் 200 விமானக்குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன.

குண்டு வீசி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமில் இருந்து பயங்கர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினர் பெரிய அளவில் வெளியே வரவில்லை.

ஆனல் ஹெலிக்கொப்டர்கள் மூலம் பல வெளியான இடங்களில் இராணுவத்தினர் இறக்கப்பட்டனர்.

முதல்நாள் 'லிபறேசன் ஒப்பறேசனில்' போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே இழப்புகள் ஏற்பட்டன.

இராணுவம் ஹெலிக்கொப்டரில் இருந்து வீசிய துண்டுப்பிரசுரங்களையடுத்து மக்கள் வேவில் பிள்ளையார், நெடிய காட்டுப் பிள்ளையார் கோவில்களில் தஞ்சம் புகுந்தனர்.

**கெருடாவில் பகுதி**

இரண்டாம் நாள் 27 ஆம் திகதி தொண்டமானறு வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களில் இருந்து சிப்பாய்கள் வெளியேறுகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்ட நேரம் தொண்டமானறு கெருடாவில் நோக்கி இராணுவம் சென்றது.

இப்பகுதியில் மூன்று பெண்கள் ஒரு குழந்தை உட்பட சுமார் 15பேரைச் சுட்டுக் கொன்றனர்.

கெருடாவில் பகுதி எங்கும் யுத்த முழக்கங்கள்; அப்பாவி மக்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்றன.

**மூன்றும் நாள்**

கெருடாவில் பகுதியில் இருந்து உடுப்பிட்டியை நோக்கி இராணுவம் சென்றது. உடுப்பிட்டிப் பகுதியை முற்றுகையிட்ட இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்து பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் இறங்கினர்.

☆ க. உதயராஜன் ☆

மூன்று வருடங்களாக முகாம்களில் கறள் பிடித்துக் கிடந்த கவச வாகனங்களும் கொண்டு வரப்பட்டன.

சுற்றிவளைப்பு என்ற போர்வையில் பத்துக்கு அதிகமானேர் இங்கு துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் வல்வெட்டித்துறைப் பகுதியில் இரண்டாம் நாள் நடைபெற்ற மோதலில் நானூறுக்கும் அதிகமானேர் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அடையாள அட்டைகளை மறந்த பலர் கூட அன்றைய நிலையில் படையினருக்குப் பயங்கரவாதிகள்போல் தோன்றினர்.

இதயம் பட படக்க உடல் நடு நடுங்க கத்திக் குழறினர். படையினர் அவர்களுடன் சிண்டி விளையாடினர்.

திடீரென இயங்கிய ஒரு சிப்பாயின் துப்பாக்கி அந்த இடத்திலேயே ஐந்து பேரைப் பலிகொண்டது.

சிதறி ஓட முற்பட்ட போது ஏனைய சிப்பாய்களின் துப்பாக்கிகளும் இயங்கத் தொடங்கின. 25 பேர் கொலையுண்டனர்.

**கம்பர்மலைப் பகுதி**

படையினர் பின்னர் கம்பர்மலை சென்ருர்கள்.

28 ஆம் திகதி கம்பர்மலை விராச்சிக்குளம் பகுதி சிப்பாய்களினுல் சுற்றி வளைக்கப்பட்டது.

பயந்த பொதுமக்கள் பதுங்கு குழியை நாடி ஓடினர்.

படையினரின் துப்பாக்கிகள் மீண்டும் இயங்கின. பலரது வீடுகள் அடித்து நொருக்கப்படுகின்றன.

குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டன. குண்டுகள் வீசி உடைக்கப்பட்டன.

கம்பர்மலைப் பகுதி யுத்த களமாகிறது. விமானங்கள் வட்டமிட படையினர் அறுநூறு பேரைப் பிடித்துக் கொண்டார்கள்.

சிப்பாய்களிடம் பிடிபட்டால் என்ன நடக்கும் என்பதை அறிந்த அவர்களில் சிலர் உயிரைப் பறக்க விட்டுத் தப்பி ஓடிக் கொண்டிருந்தனர்.

25 பேரின் உயிரைக் குடித்த ரவைகளினுல் அந்த உடல்கள் சொந்த மண்ணிலேயே உறங்குகின்றன.

தங்கள் உயிரைப் பாதுகாக்க வேண்டி மக்கள் திசை தெரியாமல், வகை அறியாமல் திகைத்துத் திண்டாட வேண்டிய பதற்ற நிலை இது விதியோ?

"லிபறேசன்- ஒப்பறேசன்" தொடர்கிறது.

ஆயிரம் ஆயிரம் மக்கள் இரவோடிரவாக வெட்ட வெளிகளில் உருண்டும் நடந்தும் ஓடோடி அடைக்கலம் தேடி வருகின்றனர்.

**நெல்லியடிப் பகுதி**

29ம் ஆம் திகதி படையினர் கரவெட்டிப்பகுதி, நெல்லியடிப் பகுதிகளையும் விட்டுவைக்கவில்லை.

கரவெட்டிப் பகுதிகளில் இராணுவத்தினர் நடத்திய வேட்டையில் 300க்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

வீடுகள் கடைகள் நொருக்கப்பட்டன.

இறுதிநாள் நெல்லியடி சிப்பாய்களினுல் முற்று கையிடப்படுகிறது.

நெல்லியடி மத்திய கல்லூரியில் இராணுவம் தங்கி அழிப்பு அட்டூழியங்களை மேற்கொண்டது.

**இலந்தைக்காடு**

இலந்தைக் காட்டு பகுதியை நோக்கிச் சென்ற இராணுவம் உடுப்பிட்டிச் சுடலைவரை சென்று சுடலையில் தஞ்சமடைந்திருந்த மூன்று பேரைச் சுட்டுக் கொன்றது.

இலந்தைக் காட்டிலும் பல பொதுமக்கள் கைது செய்யப்பட்டு இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கரணவாய் தெற்குப் பகுதியில் 11 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களையும் இராணுவம் விட்டு வைக்கவில்லை.

வடமராட்சிப் பகுதி இன்று இடிந்து அழிந்த நகரைப் போல் காட்சியளிக்கிறது.

மனித உடல்களின் நாற்றம் இன்னும் அங்கு வீசிக் கொண்டுதான் இருக்கிறது.

வானூர்திகளும், கவச வாகனங்களும், வடமராட்சிப் பகுதியை அதிர வைக்கின்றன.

தினம் தினம் ஏற்பட்ட இழப்புகள் காரணமாக இன்று வடமராட்சிப் பகுதி சாம்பர் பூத்த மேடுபோல் காட்சியளிக்கிறது. ★

# சாய்ந்த கோபுரமாய் நிற்கும் வண்ணை வைத்தீஸ்வர இராஜகோபுரம்

## சகாராபோல் காட்சி தரும் யாழ். பசார்

ஷெல் தாக்குதலில் அரைவாசி சேதமடைந்திருந்த கடையின் பெயர்ப்பலகை ஒன்று 'டக் டக்' என்று ஆடிக்கொண்டு கிடக்கிறது.

எங்கோ சுடுகாட்டில் நுழைவதைப் போன்ற ஒரு பிரமை......

முன்பெல்லாம் நாலு, ஐந்து இளைஞர்களாகச் சேர்ந்து அரட்டையடித்துக்கொண்டு காலையும் மாலையும் சுற்றிச் சுழன்ற யாழ் நகரமா இது?...... என்னுள்ளேயே ஐயம் எழுகிறது.

வின்ஸர் சினிமா சந்தியில் நிற்கிறேன். மோட்டார்சைக்கிளின் சத்தம். அதைத் தொடர்ந்து 'பெற்ரோல் பெற்ரோல்' என்ற ஒரு வியாபாரியின் குரல். அவரை அணுகுகிறேன்.

என்னைப் புரிந்து கொண்டவர் போல எனது கேள்விக்கு முன்பாகவே பதிலளித்தார்.

'எங்களுக்கு வேறு தொழில் இல்லை. சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது? உயிருக்குப் பயந்தால் எங்கடை குடும்பம் பட்டினிதான் கிடக்க வேணும்'

காலையிலே ஒரு துண்டு பாணேடு இங்கு வந்தம். இனிப் பெற்ரோல் வியாபாரம் நடந்தால் இரவுச் சாப்பாட்டைப் பற்றி யோசிப்பம்.

வியாபாரம் செய்யிற இடத்தில் மட்டும் நாங்கள் கஷ்டப்படயில்லை, எங்கட குடும்பமே இரவு நித்திரை செய்வது யாழ் புகையிரத நிலையத்தில் தான். அங்கையும் எப்ப ஷெல் வருகுதோ?

—இது பெற்ரோல் வியாபாரி செல்வத்தின் அங்கலாய்ப்பு.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். வின்ஸர் சினிமா, ஸிடோ சினிமா ஆகியவை பலத்த சேதமடைந்திருந்தன.

**நவீன சந்தைப் பகுதி**

அப்படியே நவீன சந்தைப் பக்கம் நோட்டம் விடுகிறேன்.

சினிமாப் படங்களில் பார்ப்பதுபோல் இடிந்து விழுந்த, தரைமட்டமாகி, இருந்த இடமே தெரியாமல் அழிந்து போன கடைகள்.

யாழ் நகரின் இதயம் போன்ற பசார் பகுதி மயான பூமியாக நிசப்தமாகக்காட்சி தருகின்றது.

குடாநாட்டில் அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து வந்த ஆறு நாட்களிலும் பொம்மர், ஹெலிகளின் தாக்குதல்களினுலும், ஷெல் தாக்குதல்களினுலும் யாழ்நகரில் ஏற்பட்ட அனர்த்தங்கள் இவை.

இவை மட்டுமா? நினைக்கவே மனது அதிர்ந்தது.

இந்தத் தாக்குதல்கள் தொடருமானுல் யாழ் நகரம் ஒரு 'சஹாரா' வாக மாறுமா? எனது நினைவுகள் சுற்றிச் சுழன்று வந்தன.

**ஆஸ்பத்திரி வீதி**

ஆஸ்பத்திரி வீதி யாழ் நகரின் அழிவுக்கு முன்னுரை கூறுவதைப் போல் இருந்தது.

எஸ். ரி. சண்முகநாதன் ஸ்ரோர்ஸ் முதல் சத்திரத்துச்சந்திவரை சுமார் 25 கடைகள்-பல தரைமட்டமாகவும், சில பாரிய சேதங்களுடனும் காணப்பட்டன.

அந்த வீதியில் ஒரு தேனீர்க்கடை ஒற்றைக் கதவு திறந்தபடி இருந்தது.

அதனுள் நுழைந்தேன். 16 வயது மதிக்கக்கூடிய ஒரு இளைஞன் மட்டும் நின்ருன்.

'நான் கண்டியில் இருந்து உழைக்கிறதுக்காக வந்தனுன். கடை பூட்டின பிறகும் முதலாளி சாப்பாடும் போட்டு சம்பளமும் தாருர். அந்த நன்றிக் கடனை வேறு எப்படிக் கழிப்பது?

தினமும் வந்து கடையைச் சுத்தம் செய்து விட்டுப் போவேன்'

எனது கேள்விக்கு இளைஞனின் பதில் இது.

உயிரையும் பொருட்படுத்தாது நன்றிக்கடன் செலுத்தும் ஒரு ஜென்மம்.

வெளியே வருகிறேன். கே. கே. எஸ். வீதியில் சுப்பிரமணியம் மருந்துக் கடை முதல் சத்திரச் சந்திவரை சுமார் 15 கடைகள்.

தோலிருக்கச் சுளையை விழுங்கி விட்டது போல் வெளிப்பார்வைக்குக் கட்டடம் முழுமையாகத் தெரிந்தாலும் அதன் சிமெந்துக்கல் கூட திரும்பவும் எடுத்துப் பயன் படுத்த முடியாத அளவுக்குச் சேதம்.

மரக்கறி மற்றும் பழங்கள் விற்கும் சந்தை அவற்றுடன் இணைந்திருந்த சுமார் 20 கடைகள் வெறும் மைதானமாக......

ஒரு கடையில் பெயர்ப் பலகை தவிர வேறென்றுமே இல்லை.

எல்லாம் அழிந்து விட்டன.

எனது சிந்தனை ஓட்டத்தை ஒருவரின் குரல் கலைக்கிறது......

'என்ன தம்பி இந்த இடத்திலை நடுச்சந்தியிலை நிண்டு யோசிக்கிறீர்?

அவன் மேலாலை வந்தான் எண்டால் உம்முடைய எலும்பைக்கூட எடுக்கேலாது'

இருவருமாகச் சிறிது நடந்து சத்திரச்சந்தியில் நின்று எட்டிப் பார்த்தோம். மனத்தில் இருந்த கொஞ்சத் துணிவும் பறந்தது.

சந்தியில் இருந்த சில கடைகள் மண்ணுடன் சங்கமித்திருந்தன.

கே. கே. எஸ். வீதியில் உள்ள உ[illegible] கடைகளுக்கு முன்னுல் ஆஞ்சநேய அனுமானின் படம் எந்தவித சேதமும் இல்லாமல் இருந்தது.

**வண்ணை வைத்தீஸ்வர ஆலயம்**

[illegible] எனது துணிவு பிறக்க எனது 'ருட்டை' வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பக்கமாகத் திருப்பிக் கொள்கிறேன். தினைக்குத் தலையே சுற்றியது.

உலக அதிசயமான சாய்ந்த கோபுரத்தை நினைவுபடுத்தியது சிவன் கோயிலின் ராஜகோபுரம்.

'கோபுரக் கட்டட வேலை எவ்வளவு காலமா இழுபட்டு இழுபட்டு ஒரு மாதிரி முடிகின்ற தறுவாயிலை அறுவான்கள் அடிச்சுத் துலைச்சுப் போட்டான்கள்'

அருகில் நின்ற ஒருவரின் மனக்குமுறல் இது.

அந்தக் கோயிலைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க எனக்கு சக்தியில்லை. வேதனையுடன் திரும்புகின்றேன்.

அந்தச் சந்தியிலும் சுமார் 10 கடைகள் சேதமடைந்திருந்தன.

**மானிப்பாய் வீதி**

மானிப்பாய் வீதியில் உள்ள கடைகளும் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

சேது பாட்ஸ் கடையில் இருந்து கறுப்பையா செட்டியார் உணவுக் களஞ்சியம் வரையிலான சுமார் பத்துக் கடைகள் எரிந்திருந்தன.

**பிரதான வீதி**

அங்கிருந்து பிரதான வீதிச் சந்திக்குச் சென்றேன். அங்கும் உடைந்த கடைகள் குன்றுங் குழியுமான வீதிகள் - பல அழிவுகள்.

அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது வானத்தில் ஏதோ சத்தம்.

ஹெலி ஒன்றின் சத்தம்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

**குருநகர் கடற்கரைப் பகுதி**

[illegible] எடுத்துக்கொண்டு விரை[illegible] இல்லை இல்லை யாழ் பசாரை விட்டகன்று குருநகர் கடற்கரைப் பக்கமாகச் சென்றேன்.

அங்கும் பல குடிசைகள், வீடுகள் ஷெல் குண்டின் தாக்கங்களை எனக்குக் கூருமற் கூறின.

அங்கு குடிசைகளில் மக்களைக் காணவில்லை

ஷெல் தாக்குதலுக்குப் பயந்து கொழும்புத்துறை குருமட அகதிகள் முகாமில் பலர் தஞ்சமடைந்திருப்பதாக அங்கு நின்ற ஒரு முதியவர் சொன்ஞர்.

அகதிகள் முகாமிற்குள் நுழைகிறேன்.

பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி பெனடிக்ற் திரேசம்மா தனது சோகக் கதையைக் கூறினுர்.

'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பதைப் போல தொடர்ந்தும் எனது குடும்பத்திற்கே துன்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

கடந்த ஆண்டு மண்டைதீவுக் கடலில் வைத்து 36 மீனவர்களைப் படையினர் வெட்டிக் கொன்றனர்.

அந்தச் சம்பவத்தில் எனது கணவனையும் மூன்று பிள்ளைகளையும் இழந்தேன்.

அப்போது எனக்கு மிஞ்சியவை 12 வயது நிரம்பிய மகளும் எனது வீடும் தான்.

கால் நடக்க முடியாத என்னையும் மகளையும் எனது சகோதரி காத்து வந்தார்.

எனது தங்கையும்கூட அகதியாகி இங்கிருக்கிறார்.

இதைவிட எங்களையும் ஆண்டவர் எடுத்திருக்கலாம்'

—இப்படித் தனது மனவேதனையைக் கொட்டினுர் அந்தப் பெண்மணி. ★



வண்ணை வைத்தீஸ்வர ஆலய இடிபாடுகள்

**- சண் ஜோன்சன் -**

## ஊரடங்குக் கால உச்சக்கட்ட அனர்த்தங்கள் ஒரே பார்வையில்

**26 . 05 . 87**

★ பாதுகாப்புப் படையினரின் திடீர் ஊரடங்கு உத்தரவை அறியாது வீதிகளில் நடமாடிய நாவற்குழி, அரியாலை, கோப்பாய், உரும்பராய், வயாவிளான், கோண்டாவில், நீர்வேலி, திருநெல்வேலி, வண்ணார் பண்ணை, கந்தர்மடம் வாழ் பொதுமக்கள் இரண்டு இராணுவ ஹெலிக்கொப்டர்களினுல் தாக்குதலுக்குள்ளானுர்கள். இதன் போது சிலர் காயமடைந்தனர். கட்டடங்கள் சில சேதமடைந்தன.

★ காங்கேசன்துறை "ஹாபர்வியூ" முகாமில் இருந்து ஏராளமான ஷெல்கள் ஏவப்பட்டன. ஷெல் ஏவின்போது காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகிய தொழிற்சாலைகளின் மீது விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டது.

★ யாழ்ப்பாணம் கோட்டை, மண்டைதீவு முகாம்களில் இருந்தும் கடலில் இருந்தும் கொடூரமான ஷெல் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் அதிகமானேர் காயமடைந்தனர்.

★ ஸ்ரீலங்கா அரசின் படைத் தாக்குதல் காரணமாக குருநகர், பாஷையூர், அரியாலை, நாவாந்துறை வாழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தஞ்சமடைந்தனர்.

**27 . 5 . 87**

★ காலை பத்துமணியளவில் யாழ்கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டு பழைய பூங்கா வீதியில் விழுந்து மூவரை பலி கொண்டது. ஒருவர் பலத்த காயத்துக்குள்ளானுர்.

★ இன்று யாழ் போதனு வைத்தியசாலை மீது யாழ்கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டினுல் அவசர நோயாளர்களுக்கு உடன் சிகிச்சை அளிக்கும் 9ஆம் வார்ட் கூரை பலத்த சேதத்துக்குள்ளானது.

இது யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட 9 வது ஷெல் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான அம்புலன்ஸ்வண்டி காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு யாழ் ஆஸ்பத்திரிக்கு வரும் போது ஹெலிக்கொப்டர் ஒன்று அவ்வண்டியைத் துரத்திச்சுட்டது. இத்தாக்குதலின் போது வண்டியில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். ஆனல் வீட்டு வளவிற்குள் இருந்த இருவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

தொகுப்பு:-
**வி செல்வக்குமரன்**

★ யாழ்நகரில் இன்று இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதிகளிலுள்ள பல கடைகள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

★ பொம்மர் விமானங்களில்இருந்து இன்று 90 கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. யாழ் மடம் வீதியிலும் கொட்டடிப் பகுதியிலும் இந்த 90 கலிபர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பல வீடுகளின் கூரைகள் இதனுல் சேதமடைந்துள்ளன.

★ இன்று இடம் பெற்ற மும்முனைத் தாக்குதல்களில் இருபதுக்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனர்.

★ இன்று முழுவதும் யாழ்நகரின் பல பாகங்களிலும் பொம்மர், அவ்ரோ, ஹெலித் தாக்குதல்களின் போது நூற்றுக்கும் அதிகமான குண்டுகள் போடப்பட்டன.

விட்டு விட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதல்களி

(5-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான போக்கை கடைப்பிடிக்காது

# இலங்கையின் மதிப்பு பெற முனைந்த இந்தியா!

இலங்கையில் அமெரிக்க மேற்கத்தியச் சார்பு பொருளாதாரமும் அதனடிப்படையிலான அரசியல் ஆதிக்கமும் வளர்ச்சியடைந்து வந்த சூழலிலேதான் 1983 யூலை 23 ஆம் திகதி இராணுவ ரோந்து வாகனத்தின் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலும் பின்பு தமிழின அழிப்பு இனக்கலவரமும் நிகழ்ந்தது.

இவ்வின ஒழிப்பு நடவடிக்கை இலங்கையின் வரலாற்றில் இதுவரை காலம் நிகழ்ந்த அனைத்து இனக்கலவரங்



களையும் விடப் பெரியதாகும். வடககிலும், தெற்கிலும் தமிழ் மக்களின்உயிர், உடைமைஎன்பவற்றிற்கு எத்தகைய பாதுகாப்பும் இல்லை என்பது நிரூபணமாகியது. தெற்கில் சிங்களக் காடையர்களும், வடக்கில் சிங்கள இராணுவமும், பொலீஸும் இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இச் சம்பவம் உலக அரங்கில் இலங்கையைப் பெரிதும் அவமானப்படுத்தியது.

இவ்வாறு உலக அரங்கில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல இவ்வின ஒழிப்பு நடவடிக்கை தெளிவாகத் தெரிந்த போதிலும் 1984 ஆம் ஆண்டு வெளிவிடப்பட்ட அமெரிக்காவின் உத்தியோகபூர்வ ஆண்டறிக்கையில் 1983 யூலை இனஒழிப்புக் கலவரத்தைப்பற்றி பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. 'சிங்கள மக்களை ஆத்திரமூட்டும் வகையில் பயங்கரவாதி நடந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட சம்பவமே இனக்கலவரம் ஆகும்' இவ்வாறு அமெரிக்க அரசு இனவொழிப்பை நியாயப்படுத்தியது. அமெரிக்க அரசின் இத்தகைய போக்கின் மத்தியிலேதான் இந்திய அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முதன்மை கொடுக்கத் தனது நோக்கு நிலையிலிருந்து அதனைப் பயன்படுத்த முற்பட்டது.

உண்மையில் தமிழர் விடுதலைக்கூட்டணியோ, அன்றி தமிழ்ப் போராளிகளின் இயக்கங்களோ செய்த பிரசாரத்தை விட இனப் பிரச்சினை சம்பந்தமாக இந்திய அரசு செய்த பிரச்சாரம் அதிகமாகும். இந்தியாவின் சகல வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அனைத்தும் தமது சகல மொழிச் சேவைகளிலும் இதனைப் பிரசாரப்படுத்தின. இப் பிரசாரமானது இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் உலக ரீதியாகவும் பிரபல்யம் அடையப் பெரிதும் உதவின.

இந்தக் கட்டத்தில் இந்திய அரசு பின்வருமாறு தனது கொள்கையை வகுத்தது. இந்திய அரசின் கொள்கை இரட்டைப் போக்குள்ளதாக இருந்தது. இதில் இலங்கை அரசு பொறுத்துக் கடைப்பிடித்த இரட்டைப் போக்கானது எவ்வாறெனில் ஒரு புறம் தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு பயிற்சியளித்தலும், மற்றும் ஆயுதவுதவி செய்தலும் மறுபுறம் இலங்கையரசுடன் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடல் அடுத்து தமிழ் விடுதலை இயக்கங்கள் பொறுத்து அது கடைப்பிடித்த இரட்டைப் போக்கானது ஒருபுறம் அவர்களுக்குப் பயிற்சி மற்றும் ஆயுதவுதவியளித்தலும், மறுபுறம் அவர்கள் தமிழீழ அரசை அமைக்கக் கூடியளவு பலம் பெறுமலும் அதேவேளை இந்தியாவின் காலிலே தங்கி நிற்கக் கூடியவர்களாகவும் வைத்திருத்தல் என்பனவாகும். இவ்வாறு ஒருபுறம் இரட்டைப் போக்கை ஒரே வேளையில் இந்தியரசு கடைப்பிடித்தது. இது ஒரே ஒரு தந்திரோபாயத்தின் அடிப்படையில் அமைந்த வேறுபட்ட நுணுக்க முறையாகும். அதாவது இலங்கை அரசை இந்தியாவின் தலைமையை ஏற்று சமரசம் என்ற நிலைக்கு இறங்கி வர வைப்பதற்கு இயக்கங்களைப் பயன்படுத்துதல் என்ற அடிப்படையாகக் கொண்டதாய் அமைந்தது.

இக்கட்டத்தில் இலங்கை அரசும் இருவகையான முடிவுகளை எடுத்தது. ஒன்று, விடுதலை இயக்கங்களை தோற்கடிப்பதற்கு ஏற்ற வகையில் தன்னை இராணுவ ரீதியாக தயார்படுத்தல். மற்றையது இந்தியாவைத் தலையிடாது செய்வதற்கேற்ற வகையில் வெளிநாடுகளுடன் உறவை வளர்த்தல். ஒருபுறம் இயக்கங்களைத் தோற்கடிப்பதும், மறுபுறம் இந்தியாவைத் தலையிடாது செய்தலும் என்ற தந்திரத்தின் அடிப்படையில் இயக்கங்கட்கும், இந்தியாவிற்கும் எதிரான போக்கை இலங்கை அரசு கடைப்பிடித்தது.

ஒரு புறம் மொசாட், தென்னாபிரிக்கா SAS என்பவற்றுடனான உறவும் அவற்றின் நேரடி இராணுவ ஆலோசனைகளும், ஆயுதவுதவிகளும், மறுபுறம் இந்தியாவுடன் முரண்படக்கூடிய ஆசிய



நாடுகளுடனான உறவை வளர்த்தல். இந்த வகையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் விசேட தூதுவராக அவரது சகோதரர் எச். டபிள்யூ ஜெயவர்த்தன சீன, ஜப்பான் உட்பட ஏழு நாடுகட்கு விஜயம் செய்தமையும் ஜே. ஆர். பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இலங்கையரசு எவ்வாறான திட்டங்களை தீட்டியிருந்த போதிலும் இந்தியாவை மீறி இலங்கை அரசாற் செயற்படமுடியாத புவிசார் 'அரசியல் நிலைமைகள்' நிலவின. இந்திய அரசை ஏதோ ஒரு வகையிலாவது அனுசரித்து நடக்க வேண்டிய நிலையில் இலங்கை இருந்தது. இலங்கையில் இனவொழிப்புக் கலவரம் 1983 இல் நடந்ததும் அதனை நேரிற் சென்று பார்வையிட, இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்பு பிரச்சினையைச் சமரசம் செய்து வைப்பதற்கான முயற்சியில் பிரதமர் இந்திராவின் விசேட தூதுவராக ஜி. பார்த்தசாரதி அனுப்பி வைக்கப்பட்டார். இதன் விளைவாக ஜே.ஆர். சர்வகட்சிமகாநாட்டை 1984 ஜனவரி 10ம் திகதி கூட்டினார். இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே 'இணைப்பு சி' பற்றிய தீர்வு முன்னிலைக்கு வந்தது. ஆயினும் சர்வகட்சி மகாநாடோ, 'இணைப்பு - சி' திட்டமோ எத்தகைய வெற்றியும் இன்றித் தோல்வியில் முடிந்தன.

இலங்கைத்தீவு இரு அரசுகளாகப் பிரியாமல் ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு ரீதியிலான தீர்வைக் காணும் நோக்குடன் இந்திராகாந்தி இலங்கை அரசு பொறுத்துத் தீவிரப்போக்கைக் கடைப்பிடித்து வந்தார். இந்திராகாந்தியினது இத்தகைய தீவிரப்போக்கானது இலங்கையில் இராணுவம் நேரடியாகவோ, அன்றி மறைமுகமாகவோ தலையிட்டுத் தமிழீழ அரசை அமைக்க உதவுமென்று எண்ணக் கருவும், நம்பிக்கையும் தமிழ் மக்களின் நெஞ்சங்களிற் பெரிதும் வளரக் காரணமாயமைந்தது.

இந்திரா காந்தி தனது நோக்கு நிலையில் தீவிரப் போக்கை இலங்கையைப் பொறுத்துக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த கட்டத்தில் 1985 இல் பொதுத்தேர்தலை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். உள்நாட்டுத் தேவையின் நிமித்தம் இந்திராகாந்தி இலங்கை மீதான ஒரு படையெடுப்பை மேற்கொண்டு இனப்பிரச்சினைக்கு ஒரு சமஷ்டி அமைப்பு ரீதியான தீர்வை ஏற்படுத்தி இலங்கையை இந்தியாவின் கட்டுப்பாட்டை மீறமுடியாத ஒரு நாடாக்கி விடக்கூடுமோ என்ற அச்சம் ஏகாதிபத்திய வாதிகளின் பக்கம் இருந்த கட்டத்தில் இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டார்.

இந்திரா காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மகன் ராஜீவ் காந்தி அதிகாரத்திற்கு வந்தார். அவர் பதவிக்கு வந்ததும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் சற்று நெகிழ்ச்சி ஏற்பட்டது. அமெரிக்கா தனது பக்கம் ராஜீவ் காந்தியை வென்றெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டது. இந்திரா காந்திக்கு அளிக்காத முக்கியத்துவத்தை ராஜீவிற்கு அமெரிக்க அரசு அளித்தது. 1985 ஆம் ஆண்டு ராஜீவ் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தபோது அமெரிக்க காங்கிரஸின் இரு சபைகளும் ஓர் அமர்விற்கூடி அதில் ராஜீவை உரை நிகழ்த்த ஒழுங்கு செய்தது. இவ்வாறு இந்திரா காந்திக்கு அமெரிக்கா ஒருபோதும் ஒழுங்கு செய்யவில்லை. ராஜீவின் பொருளாதாரத் திட்டமும் அமெரிக்காவிற்கு இந்தியாவில் பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாய் அமைந்தது. ராஜீவைத் தமது பக்கம் வென்றெடுக்கும் நோக்குநிலை காரணமாக இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்கா தனது இறுக்



கமான போக்கைத் தளர்த்தியது.

இலங்கைப் பிரச்சினையில் இந்திரா காந்தி கடைப்பிடித்த தீவிரப் போக்கிலிருந்து மாறுபட்டதாக ஒரு மென்மையான போக்கை இலங்கை அரசுடன் இந்திய அரசு கடைப்பிடிக்க முற்பட்டது. இதில் ரொமேஷ் பண்டாரி முக்கிய பங்கெடுத்தார். இலங்கை அரசுடன் நல்லுறவைப் பேணுவதற்கேற்ற சமரசத் தீர்வை காண்பதற்குப் பண்டாரி முயன்றார். இத்தகைய எண்ணத்தின் அடிப்படையில் இந்திய அரசு இயக்கங்களை வற்புறுத்திச் சமரசத் தீர்வுக்கு வர வைக்க முயன்றது. ஆனால் தீர்வுக்கான முயற்சிகள் இலங்கை அரசின் பக்கத்திலிருந்தே தோல்வியில் முடிந்தன. இப்பேச்சுவார்த்தையின் இராஜதந்திர நடவடிக்கைகளைப்பற்றி இங்கு ஒரு மதிப்பீடு செய்யப்படல் அவசியமாகும். ராஜீவ் பிரதமரானதும் இராஜதந்திரிகள் மட்டத்தில் சில மாற்றங்களைக் கடைப்பிடித்தார். ஒரு புறம் பார்த்தசாரதியை இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதிலிருந்து விலக்குமாறு இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்தது. மறுபுறம் இலங்கைப் பிரச்சினையிலும் பொதுவாக உலக விடயங்களிலும் ரொமேஷ் பண்டாரியின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுக்க முற்பட்டார். இலங்கை அரசின் வேண்டுகோளின்படி இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதிலிருந்து பார்த்தசாரதியை விலக்கி வைத்து, ரொமேஷ் பண்டாரியின் பொறுப்பில் விட்டார். இந்நிலையில் அவர் தனது கொள்கையைப் பின்வரும் அடிப்படையில் வகுத்தார்.

இலங்கை அரசுடன் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்காமல் இலங்கை அரசுக்குச் சாத்தியமான விட்டுக் கொடுப்புகளைச் செய்து, நன்மதிப்பைப் பெற்று அதனுடன் ஒத்துழைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குச் சமரசத்தீர்வு காணலாம் என்பதும், தமிழ் விடுதலை இயக்கங்களை இந்த நிலையில் ஆணையிட்டுப் பணிய வைக்கலாம் என்பதும்

(5ஆம் பக்கம் பார்க்க)

- உதயன் - விஜயன் -

# திருகோணமலையில் தளம் அமைக்க

# அமெரிக்காவின் நீண்டகால முயற்சி

இலங்கை இனப் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தமிழர் அமைப்புக்களுக்கு ஆயுதங்களை ரஷ்யா வழங்கி வருவதாக சில மேற்குநாட்டு பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் (வால்ஸ்ரீட் ஜர்னல் உட்பட) குற்றம் சுமத்தியுள்ளன.

இலங்கையில் உள்ள திருகோணமலைத் துறைமுகத்தையும் பெரிய விமானத்தளம் ஒன்றையும் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுவதற்காக ரஷ்யா இப்படிச் செய்வதாக அவை குற்றம் சாட்டுகின்றன.

இந்தச் செய்திகள் தொடக்கத்தில் இருந்து முடிவுவரை குரூரமான கற்பனைஎன்று நொவஸ்தி பிரஸ் ஏஜன்ஸி அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கின்றது.

இனப்பிரச்சினை என்ற போர்வையில் இப்பிராந்தியத்தில் இராணுவ பலத்தைக் கட்டி எழுப்பச் சில சக்திகள், குறிப்பாக அமெரிக்கா முயற்சி செய்வதை மூடிமறைக்கும் நோக்குடனே இப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்வரும் காரணங்களில் இருந்து அதை அறிந்து கொள்ள முடியும்.

இந்து சமுத்திரத்தில் உள்ள திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படைத் தளமாகப் பாவிப்பதற்கு அமெரிக்கப்பாதுகாப்புப் படை, விசேடமாக கடற்படை நீண்டகாலமாக முயற்சித்து வருகிறது.

கடற்படையினருக்கு விடுமுறை என்ற பெயரில் அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்குச் சென்று வருவதாக தென் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள பொது சனத்தொடர்பு சாதனங்கள் அறிவித்து வந்துள்ளன.

இன்னும் அந்த முயற்சி இருக்கிறது.

உளரீதியான யுத்தத்தை விஸ்தரிப்ப

> **இந்து சமுத்திரத்தில் உள்ள திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படைத் தளமாகப் பாவிப்பதற்கு அமெரிக்கப் பாதுகாப்புப்படை, விசேடமாகக் கடற்படை நீண்டகாலமாக முயற்சித்து வருகிறது.**

துடன் 'பலத்தைக் காட்டுவதும்' இணைந்து உள்ளது.

இலங்கையில் வோய்ஸ் ஒப் அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு அமெரிக்கா பல ஆண்டுகளாக முயற்சித்து வருகின்றது.

வாஷிங்டனில் உள்ள வோய்ஸ் ஆப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்துக்கு இரண்டாவதாக இலங்கை நிலையம் அமையும்.

இப்பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள வோய்ஸ் ஒப் அமெரிக்காவின் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை விரிவுபடுத்துவதே இலங்கை நிலையம் அமைக்கப்படுவதன் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

இது குறித்து சோவியத் யூனியன் ஏற்கனவே தனது கவலையைத் தெரிவித்து விட்டது.

இலங்கையில் நிறுவப்படவிருக்கும் வோய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையத்தின் ஒலிபரப்பு எல்லைக்குள் ரஷ்யாவின் கிழக்குப் பகுதிகளும் அடங்குவதே ரஷ்யாவின் கவலைக்குக் காரணமாகும்.

இருந்தும் வோய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையம் கட்டப்பட்டு வருகிறது; வோய்ஸ் ஒப் அமெரிக்கா நிறுவனத்துக்காக மட்டுமல்ல.

இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் கப்பல்களின் நடமாட்டம்பற்றி அமெரிக்கக் கடற்படை அறிந்து கொள்ளவேண்டும் என்ற முக்கியநோக்கத்துடன்தான் வோய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையம் இலங்கையில் நிறுவப்படுகின்றது. இது தான் உண்மை.

இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் நடமாடும் அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்களுடன் தொடர்பு கொள்வதும் இந்த

## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையமும் அத்தகையதே

நிலையம் அமைக்கப்படுவதன் இன்னொரு நோக்கமாகும்.

சொந்த அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பென்டகனின் இன்னொரு நோக்கத்தையும்

-தீபன் ராஜா-

ஒருவர் கவனிக்காமல் இருக்க முடியாது.

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவதற்காக சர்வதேச மாநாடு ஒன்றை 1988 இல் கொழும்பில் நடத்த வேண்டும் என்று ஏனைய நாடுகளுடன் சேர்ந்து இலங்கையும் பிரசாரம் செய்து வருகின்றது.

இந்த நிலைப்பாட்டை, சோவியத் யூனியன், ஏனைய சோஷலிச, அணிசேரா நாடுகளுடன் சேர்ந்து பூரணமாக ஆதரித்து வருகிறது.

இப்பிராந்தியத்தில் நிரந்தரமாக விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று

> நொவொஸ்தி பிரெஸ் ஏஜன்சி வெளியிட்டுள்ள கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

டன் கூடிய 30 யுத்தக் கப்பல்களுக்கு மேல் வைத்துள்ள அமெரிக்கக் கடற்படைக்கு இந்த சர்வதேச மாநாடு பிடித்தமில்லாத ஒன்றாக இருக்கலாம்.

இந்த மாநாடு நடத்தப்படும் முயற்சியை ஒரு தரத்துக்கு மேலாக இவ்வட்டாரங்கள் குழப்பி விட்டன.

இதனை விட ஐ. நா இந்துசமுத்திர சமாதானப் பிராந்திய விசேட குழுவை கலைத்து விடும்படியும் சர்வதேச மாநாடு என்ற எண்ணத்தையே மறந்துவிடும்படியும் அமெரிக்கா ஆலோசனையும் கூறியது.

பழியை வேறு இடத்தில் போடுவதற்காக தனது மனதில் உள்ள இராணுவத் திட்டங்களை அமெரிக்கா சோவியத் யூனியன் மீது சுமத்தப் பார்க்கின்றது.

இந்துசமுத்திரப் பிரச்சினை குறித்த சோவியத் யூனியனின் நிலை தெளிவானது.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் விளாடிவொஸ்டொக்கிலும் நவம்பரில் புதுடில்லியிலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் தனது பேச்சுக்களில் தெளிவாக எடுத்துச் சொல்லி இருந்



தார்.

ஹராரே அரசியல் பிரகடனத்தின்படி இப்பிராந்திய நிலையை மதிப்பீடு செய்து ஆதரவளிக்கின்றது சோவியத் ரஷ்யா.

இந்துசமுத்திர அமைதிப் பிராந்திய மாநாட்டைக் கொழும்பில் விரைவில் கூட்ட வேண்டும் என்றும் சோவியத் யூனியன் கூறுகிறது.

இம்முறையும் இம் மாநாட்டைக் கூட்டாமற் செய்ய அமெரிக்கா இனப்பிரச்சினையைப் பயன்படுத்தும்.

இலங்கையின் இனப் பிரச்சினை மோதல்கள் அதிகரிப்பதால் யார் நன்மை அடைவர்? பதில் மிகத் தெளிவானது.

இந்து சமுத்திரத்தை இராணுவமயப்படுத்தக் கூடாது என்பதில் அக்கறையுள்ளவர்கள் [illegible] னடைவர்.

—நொவொஸ்தி பிரெஸ் ஏஜன்ஸி

# தெற்கில் தங்கியிருப்பது

## இன்னும் எத்தனை நாளைக்கு?

எமக்குத் தேவைப்படும் பெரும்பாலான பொருள்களுக்கு நாம் தெற்கையே நம்பியிருப்பதால் லொறிகள் முகாம்களில் தடுத்துவைக்கப்படும்போதும் தீவிர மோதல்கள் ஏற்படும் போது வாகனங்கள் முற்றாக வராதிருக்கும் போதும் நாங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றோம். பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு நாங்கள் கூடிய விலை கொடுக்கவேண்டி ஏற்படுகிறது. சிலவேளைகளில் பொருள்களே இல்லை என்ற நிலையும் ஏற்படுகின்றது.

குடாநாட்டில் பணநோட்டுக்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஆள்பவர்களின் தயவின்றி இங்கு பணநோட்டுக்கள் கொண்டுவர முடியாது என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்தநிலை இலங்கையில் வேறு எங்குமே இல்லை. இந்தத் துர்ப்பாக்கிய நிலையை நீக்குவதற்கு நாங்கள் எல்லாவற்றிற்கும் தெற்கில் தங்கியிருக்கும் நிலையில் இருந்து விடுபட்டு எமக்குத் தேவையானவற்றிற்கு நாம் எம்மிலேயே தங்கியிருக்கும் நிலையை உருவாக்கவேண்டும்.

அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தோடு பொருளாதாரச் சுதந்திரத்திற்கான போராட்டம் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தை விடத் தீவிரமாக முன்னேறிச் செல்லுமிடத்துப் பின்னைய போராட்டம் மிகவும் இலகுவானதாகி விடும்.

இவற்றை எல்லாம் நன்குணர்ந்து நாம் கீழ்க் கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் முன்னதாக எமது பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டுவோமா?

தெற்கிலிருந்து வரும் பல தேவையற்ற பொருள்களை வாங்குவதாலேயே எமது பணத்தின் பெரும்பகுதி வெளியே செல்கின்றது என்பதையும் அப்படிச் செல்லும் பணம்தான் இங்கு பணப்பற்றாக்

> பொருளாதார சுதந்திரத்துக்கான போராட்டம் அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டத்தை விடத் தீவிரமாக முன்னேறிச் செல்லுமிடத்து பின்னைய போராட்டம் மிகவும் இலகுவானதாகிவிடும்.

குறையைஏற்படுத்துகின்றது என்பதையும் நாம் அறியாதிருக்கின்றோம்.

எமது பணத்தில் பெரும்பகுதி தேவையற்ற பொருள்களாகிய மதுவிலும், புகைபிடித்தலிலும் செலவாகிறது. இந்த இரு பொருள்களை மட்டும் வாங்குவதனால் எத்தனையோ ஆயிரக் கணக்கான ரூபாய்கள் தினசரி வெளியேறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இயன்றவரையில் இந்தப் பழக்கங்களைத் தவிர்ப்பதோடு இவற்றில் ஈடுபட்டுள்ள மற்றவர்களைத் திருத்தவும் நாம் முற்படவேண்டும்.

உடம்பிற்குத் தேவையான சத்தையும், குளிர்ச்சியையும் தரும் எம்மவர்களால் தயாரிக்கப்படும் திராட்சை, நெல்லி ஆகியவற்றின் ரசங்களை விடுத்து எம்மை நாடி வரும் விருந்தினருக்கு வெளியில் இருந்து தருவிக்கப்பட்ட குளிர்பானங்களையே நாம் கொடுக்கின்றோம். இப்படிச் செய்யும்போது எமது பணம் வெளிச் செல்கிறது என்பதை நாங்கள் உணர்வதில்லை.

உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளுக்குச் செல்லும்போது இங்கு தருவிக்கப்பட்ட உயர்ந்தரக பிஸ்கற்றுக்களையும் சொக்கலேற்றுக்களையும் வாங்கிச் செல்லும் நாம் அவற்றிற்குப் பதிலாக எமது விவசாயிகளின் உழைப்பில் உருவான ஒரு சீப்பு வாழைப்பழத்தையோ அல்லது வளம் மிக்க வன்னி மண்ணில் விளைந்த நிலக்கடலையில் செய்யப்பட்ட கச்சான் அல்வா, கிழக்கில் விளைந்த கசுக்கொட்டை வறுவல் போன்றவற்றை எடுத்துச்செல்லலாமே!

சீனிக்குத் தட்டுப்பாடு என்றும் அநியாய விலையில் விற்கிறார்கள் என்றும் அங்கலாய்த்துக் கொண்டே அதனை வாங்கும் நாம் அதனை விட அதிக சத்தும், சுவையும் கொண்ட எம்மக்களால் தயாரிக்கப்பட்ட பனங்கட்டியை மறந்துவிடுகிறோம். அதனை வாங்கித் துண்டுதுண்டாக வெட்டி வைத்து, சற்றே ஆறிய தேனீருடன் பாவிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம். இதனால் பெருமளவு பணம் வெளிச்செல்வதைத் தடுப்பதோடு எம்மவர்களில் பலபேருக்கு வேலைவாய்ப்பையும், வருவாயையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்பதையும் நாம் உணர்கிறோமா?

மண்ணெண்ணெய்க்கு நாயாய் அலைகின்றோம். அதேவேளை வீட்டிலேயே தேங்காயெண்ணெயைக் காய்ச்சி மண்ணெண்ணெய்க்குப் பதிலாக அதனைப் பாவிக்கப் பல தென்னைகளைச் சொந்தமாகக்கொண்டவர்கள் கூடச் சிந்திப்பதில்லை. மண்ணெண்ணெய் விளக்கிற்குப்பதிலாக அதிக திரிகளைப் பாவித்துக் குத்துவிளக்குகளைப் பிர

(5 ஆம் பக்கம் பார்க்க)

க. கனகசபாபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிய மன்னனுக்கு உணவு அனுப்பிய பண்டைய தமிழ் வள்ளல் சடையப்பர்

சில நாட்களாக யாழ்நகர் இரவும் பகலும் இருண்ட நாட்களாக இருக்கின்றது. மாணவர் கல்வி மறுக்கப்பட்டுள்ளது. இந்த மண்ணின் மைந்தர்கள் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. மக்களின் மூலபலம் முறிக்கப்பட்டுள்ளது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பொம்மரும், ஹெலியும் குண்டுமாரி பொழிந்தும், ஷெல் அடித்தும், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்தும் மக்கள் மனத்தைக் கிலி கொள்ளச் செய்துள்ளனர் அரச படையினர்.

இன்றைய இலங்கையையும் அன்றைய இலங்கையையும் எண்ணிப் பார்க்கிறேம். ஈழத்திலே கடுங்காற்றுச் சுழன்று வீசுவதில்லை. கதிரவன் வெம்மை புகுவதில்லை. காலன் கொடுமை நிகழ்வதில்லை. வானவர் பகைமை வருவதில்லை. என்றும் அழியாத அறமும் சென்று அடைவதில்லை என்று கவியரசன் கம்பர் கவினுறக் கூறுகின்றார்.

மஞ்சு தோய உயர்ந்த மதில்களும், விண்ணை முட்டும் மாடங்களும் அமைந்திருந்ததால் கடுங்காற்றின் வேகம் புகாதாயிற்று. நீர்வளமும், நிலவளமும் மிகுந்திருந்த இந்நகரில் எங்கும் நீங்காது நிழல் விரித்த சோலைகளும் சாலைகளும் செறிந்ததனுல் கதிரவன் வெம்மை அங்கு செல்லாதாயிற்று.

இத்தகைய வளமார்ந்த வண்ண நகரில் வாழ்ந்த மக்கள் அனைவரும் வயிருர உணவருந்திக் கவலையின்றிக் களித்து வாழ்ந்தனர். பசியும் பிணியுமின்றிப் பண்புற வாழ்ந்தனர். இத்தகைய நாட்டில் இளமையில் முதுமையும் இளவயதில் சாவும் ஏற்படவில்லை. அதில் எது வித வியப்புமில்லையன்றே?

இத்தகைய ஈழநாட்டில் அறம் இல்லாமல்

**புத்தொளி**

மறம் குடிகொண்டுள்ளது.

'இரக்கம்என்
ஞெருபொருள்
இலாத நெஞ்சினர்
அரக்கரென் றுளர்சிலர்
அறத்தின் நீங்கினுர்'

என்று அரக்கரின் நிலைமையைக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றுர். இத்தகைய அரக்க குணம் படைத்த சிலரது உள்ளம் ஈரமற்றதாக இருந்தமையால் இராமன் அம்புக்கு இரையாயிற்று. எப்பகையினும் அறப்பகையே கொடிதென்பது அரக்கர் அழிவுற்றதால் அறியக் கிடக்கின்றது.

ஈழம் தமிழகத்தினின்றும் பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது. தலைமன்னரிலிருந்து கப்பலில் மூன்று மணிநேர பிரயாணத்தில் இராமேஸ்வரம் சேர்ந்து விடுகிறேம். இத்தகைய தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் பண்டைக்காலம் முதல் போக்கு வரவு உண்டு. ஏற்றுமதியும் இறக்குமதியும் உண்டு.

அக்காலத் தமிழரசர் சிலர் இலங்கைக்குவந்தார்கள். இலங்கை அரசர் சிலர் தமிழ் நாட்டுக்குப் போனுர்கள். சேர நாட்டரசனுகிய செங்குட்டுவன் கண்ணகி தெய்வத்திற்கு வஞ்சிமாநகரத்தில் கோயில் கட்டித் திருவிழா நடத்திய போது இலங்கை அரசனுகிய கஜபாகு மன்னன் வந்திருந்து அக்காட்சியைக்கண்டு மகிழ்ந்தான். அம்மன்னன் அரசு புரிந்த காலம் இரண்டாம் நூற்ருண்டின் முற்பகுதியென்பர். கண்ணகியின் காட்சியைக் கண்ட கஜபாகு மன்னன், ஈழத் திருநாட்டில் கண்ணகிக்குக் கோயில் கட்டி ஆடிமாதம் தோறும் அணி விழாக் கண்டான்.

இத்தகைய தொடர்புகளுடன் வாழும் போது கண்டிமா நகரத்தில் பரராஜசிங்கன் என்னும் அரசன் அரசு புரிந்த காலத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பசியாலும் பட்டினியாலும் நலிந்து மெலிந்து வருந்தினர். இதைக் கண்ட அரசன் தமிழ் நாட்டில் பெருஞ் செல்வராக விளங்கிய சடையப்ப வள்ளலிடம் தன் குறையைத் தெரியப்படுத்தினுன். சடையப்பவள்ளலார் வயலில் விளைந்த நெல், கப்பலில் ஏற்றப்பட்டு கண்டி மாநகர் வந்தடைந்தது. பசி தீர்த்தது. மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். மன்னன் பரராஜசிங்கன் சடையப்ப வள்ளலை ''தரும தேவதை'' என்று புகழ்ந்தான். மனமார வாழ்த்தினுன். அவனது வாழ்த்து கவின் கவியாயிற்று.

இரவு நண்பக லாகிலென்பகல்
இருளரு இர வாகிலென்
இரவி எண்டிசை மாறிலென்கட
லேழும் ஏறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமை பேணிய
மன்னர் போகிலென் ஆகிலென்
வளமை இன்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரணமாகவே
கருது செம்பொனின் அம்பலத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலே ஒரு
கருணைமாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி
தங்குமானிய சேகரன்
சங்கரன் தரு சடையன் என்ஞெரு
தரும தேவதை வாழவே.

என்ற பாட்டு, கண்டியரசன் மனத்திலெழுந்த நன்றியை நன்ருக எடுத்துக் காட்டுகின்றது.

நாம் இன்று கேட்காமலே பத்தொன்பது படகுகளில் யாழ்ப்பாண மக்களுக்கு பாரததேசம் உணவுப்பொருள்களை அனுப்புவதற்குச்செய்யப்பட்ட முடிவு அறத்தின் பாற்பட்ட அருமையான முடிவல்லவா?

உணவுப் படகுகள் இன்று அவசியமில்லை என்கிறது அரசு. ஆனல் இன்று நம் மக்கள் அன்ருடம் படும் துயரத்திலும் துன்பத்திலும் பாரதம் காட்டும் திறந்த மனதும் திடமான அறத்தின் பண்பும் எண்ணி மகிழத்தக்கது. ★

# கலக்கத்தை முதலில் தந்து மகிழ்ச்சியை அடுத்துத் தந்த இந்திய விமானங்கள் ஒன்பது!

பசியாலும் பட்டினியாலும் வாடும் யாழ்ப்பாணமக்கள்வான்வெளியில் பறந்த விமானங்களைக் கண்டு பதறியடித்து ஓடிப் பின்னர் பதற்றம் தணிந்து கண்ட காட்சி இந்திய நிவாரணப் பொருள்களை விடச் சுவையானது.

இது சம்பந்தமாக பலர் என்னிடம் தங்களது அனுபவங்களைத் தெரிவித்தனர்.

பட்டினியால் வாடிய நிவாரணப் பொருள்களை வழங்க மக்களுக்கு 'பரிவுடன்' வந்த படகுகளை இலங்கை திருப்பி அனுப்பி விட்டதே என்ற கவலையுடன் நான் இருந்தேன்.

மாலை நான்கு மணி அளவில் பெரும் இரைச்சல்களுடன் எனது வீட்டுக்கு மேலால் நான்கு சாம்பல் நிற விமானங்கள் பறந்து வந்தன.

வடமராட்சியைப் பிடித்த இராணுவத்தினர் யாழ்ப்பாணத்துக்குள்ளும் விமானங்கள் மூலம் வருவதாக வீதியால் சொல்லிக் கொண்டு மக்கள் ஓடினர்.

அது ஆமி இல்லை ஐயா இந்தியாப் பிளேன்கள் பொருட்களைப் போடுகின்றன.

இந்தியாப் பிளேன்களா? என்று ஆச்சரியப்பட்டேன் செம்மூக்கன் பரம்பரை சும்மா விடாதையா!

இப்படிக் கூறியவர் இருபாலையைச் சேர்ந்த எஸ். கந்தசாமி என்பவராகும். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பின்வருமாறு தெரிவிக்கிருர்.

கடமை முடிந்து நானும் கணவரும் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்.

கந்தர்மடத்துக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்த பொழுது நான்கு விமானங்கள் எம்மை நோக்கி மிகத் தாழ்வாக வருவதை அறிந்து மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்துக் காதைப்பொத்தியபடி வீதிக் கரையில் படுத்துக் கொண்டேன்.

மீண்டும் வீதியில் எழுந்து நின்று பார்த்த பொழுது வீதியால் வந்த ஒருவர் சொன்னுர். என்னம்மா முழிக்கிறீர்கள்? இந்தியர்கள் வந்திட்டாங்கள் சாப்பாடு போடுருங்கள் என்ருர்.

### காதல் செய்த விமானங்கள்

கைதடியைச் சேர்ந்த கே. மார்க்கண்டு என்பவர் கூறியது இதோ:

கைதடிப் பாலத்தால் நான் வந்து கொண்டிருந்த பொழுது இரண்டு விமானங்கள் பெரும் இரைச்சலுடன் நாவற்குழி முகாமை வட்டமிடுவதை அவதானித்தேன்.

புதிய குண்டு வீச்சு விமானங்களோ என எண்ணிய நான் சைக்கிளையும் கடலுக்குள் வீசிவிட்டு பற்றை ஒன்றுக்குள் மறைந்து கொண்டு என்ன நடக்கப் போகிறது என்பதை அவதானித்தேன்.

பலூன்கள் போடப்பட்டன. ஆமிக்காரன்கள் தான் 'பரசூட்' மூலம் இறங்குகிருர்கள் என நினைத்து பற்றைக்குள் மறைந்திருந்த நான் உயிர் தப்பினுல் போதும் என்று வேட்டி உரிய உரிய ஓடித் தப்பினேன்.

### குண்டு விமானப் பயம்

கொக்குவிலைச் சேர்ந்த ஆர். அகிலா என்ற பெண் தகவல் தருகையில் இப்படிக் கூறினுர்:-

மாலை நான்கு மணி அளவில் அம்மம்மா வீட்டில் நான் நின்று கொண்டிருந்தேன்.

வீதிகளில் சனங்கள் எல்லாம் பதறியடித்துக் கொண்டு ஓடினுர்கள்.

என்னவென்று விளித்தேன். பாகிஸ்தான் விமானங்கள் குண்டு

**க. இரத்தினராஜசிங்கம்**

வானத்தில் பறவைகள் காதல் கொள்வது போல இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று சேருமாப் போல் அழகாகப் பறந்து கொண்டிருந்தன.

திடீரென விமானத்தில் இருந்து பெரிய

போடப் போகின்றன என்றபடி ஓடினர்.

''வாய்க்குள் குண்டு விழப்போகிறது பதுங்கு குழிக்குள் வா'' என்று எனது அம்மம்மா கூப்பிட்டும் நான் போகாமல் விமானங்களின் சாகஸங்களை ரசித்தேன்.

திடீரென விமானங்களில் இருந்து பரசூட்டுகள் இறங்குவதைக் கண்டதும் இந்திய விமானங்களில் இருந்து பொதிகள் போடுகிருர்கள் என்று வீதியால் வந்த ஒருவர் தெரிவித்தார்.

### கிணற்றில் குதித்தவர்

கோப்பாயைச் சேர்ந்த பாலன் என்பவர் கூறுகிருர். மாலை நேரம் தோட்டத்தில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது 'உய்' 'உய்' என்ற சத்தங்கள் கேட்டன. வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். வௌவால்கள் பறப்பது போல் கரிய நிறத்தையுடைய ஆறு பிளேன்கள் மேலும் கீழும் இறங்குவதும் ஏறுவதுமாகப் பறந்து கொண்டிருந்தன.

மண்வெட்டியைச் சுழற்றி எறிந்த நான் தோட்டக் கிணற்றினுள் குதித்து விட்டேன்.

மூச்சை அடக்கிக் கொண்டு அரை மணித்தியாலமாக இருந்து பின் வெளியே வந்து பார்த்த பொழுதுதான் இந்தியப் பிளேன்கள் இவை என விளங்கியது.

உரும்பராயைச் சேர்ந்த எம் சிவசோதி என்பவர் கூறுகிருர்.

நான் கிணற்றடியில் குளித்து விட்டு உடம்புக்கு சவர்க்காரம் தேய்த்துக் கொண்டிருந்த பொழுது எனது மனைவி 'ஐயோ பொம்மர்கள் வந்துவிட்டன குண்டு வீசப் போகிறது பதுங்கு குழிக்குள் வாங்கோ' எனக் கத்தினுர்.

சவர்க்காரம் தேய்த்த உடம்புடன் ஓடிச் சென்று பதுங்கு குழிக்குள் பதுங்கிக் கொண்டேன். பின்னர் எனது மகன் வெளியில் இருந்து வந்து 'அப்பா இந்தியப் பிளேன்கள் உணவுப் பொருட்களைப் போட்டு இருக்கிருர்கள்' என்று சொன்னதும் தான் எனக்கு நிலைமை விளங்கியது.

### நன்றித் தந்தி

முதன் முதலாக இந்தியாவுக்கு நன்றி கூறித் தந்தி அடித்து விட்டுத் தான் மற்ற அலுவல்களைக் கவனிக்கப் போகிறேன். இப்படி யாழ் வர்த்தகர் ஒருவர் சஞ்சீவிக்குக் கூறினுர்.

★ ★ ★

### தெற்கில்---

(4-ஆம் பக்க தொடர்ச்சி)

யோசனப்படுத்தலாம். பெரிய வளவுகளைக் கொண்டுள்ளவர்கள் வீட்டிற்கு மூன்று கோழிகள் வளர்க்க ஆரம்பித்தாலும் முட்டையில் எமது தேவையில் ஒரு கணிசமான அளவைப் பூர்த்தி செய்யலாம். ★

### ஊரடங்குக் கால உச்சக்கட்ட..--

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னுல் இருவர் கொல்லப்பட்டனர். இக்குண்டு வீச்சின்போது பலகோடி ரூபா பெறுமதியான, உடைமைகள் நாசமாக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

★ மண்டைதீவுக் கடலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்களினுல் சின்னக்கடைப் பகுதியில் உள்ள பலகடைகள் சேதமடைந்தன. டிஸ்பென்ஷறிஒன்றும் பலத்த சேதத்துக்குள்ளானது.

**27. 05. 1987**

★ சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வண்ணுர் பண்ணை சிவன்கோயில் மீது அவ்ரோ விமானங்களில் இருந்து போடப்பட்ட பீப்பாய்க்குண்டுகளினுல் கோயிலில் தஞ்சமடைந்த 7 பேர் கருகி மாண்டனர்.

**28. 05. 87**

★ மானிப்பாய் வீதியில் உள்ள சில வர்த்தக நிலையங்கள் அவ்ரோவில் இருந்து போடப்பட்ட பீப்பாய்க் குண்டினுல் எரிக்கப்பட்டுள்ளன.

**29. 05. 87**

★ நாவற்குழி இராணுவ முகாம் பகுதியில் விசேட விமானம் சேத முற்று இறங்கிய காரணத்தால் அதைப் பாதுகாக்கும் நோக்குடன் பொம்மர்கள், ஹெலிகள் வான ரோந்து புரிந்தபோது ஹெலிகளில் இருந்து முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரொக்கட், மோட்டோர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

**30. 05. 87**

★ அரியாலை, நாவற்குழிப் பகுதிகளில் இன்று காலை குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார்.

★ யாழ்ப்பாணத்தில் இன்று காலையும் மாலையும் பொம்மர் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் நடத்திய தாக்குதல்களினுல் ஒருவர் கொல்லப்பட்டார்.

**31. 05. 87**

★ பொதுமக்களைத் தஞ்சமடையுமாறு கோரிய பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள் மீது பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டதில் ஆலய தர்மகர்த்தாக்கள் உட்பட இருபதுக்கும் அதிகமான பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வல்வெட்டித் துறை, நெல்லியடி, செருடாவில், உடுப்பிட்டி, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் உள்ள கடைகள், வீடுகள், ஆலயங்கள், மடங்கள், படமாளிகைகள் அனைத்தும் குண்டு வீச்சு விமானங்களினுலும் புல்டோசர்களினுலும் அழித்து நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

★ ஸ்ரீலங்கா அரச படைகள் நடத்திய விமானத்தாக்குதல்களினுல் வதிரியில் உள்ள ஆலயம் ஒன்றின் அருகில் பல பொதுமக்களின் சடலங்கள் சிதறிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

**01 . 6 . 87**

★ ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் சழியமுதல் யாழ் நகரில் ஷெல் தாக்குதல்கள் மேற்ககாள்ளப்பட்டதனுல் பலர்காயமடைக்தனர். ஒருவர் கவலைக்கிடமாக உள்ளார்.

★ கோப்பாய் பாலத்தின் அருகே இன்று மாலை 6. 30 மணியளவில் ஹெலிக் கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட கொடூரத்தாக்குதலில் லொறிச்சாரதி உட்பட இருவர் பலியானுர்கள். லொறியும் பலத்த சேதத்துக்குள்ளானது.

# கடுமையான போக்கைக் கடைப்பிடிக்காது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அடிப்படையாகும். இலங்கை இனப்பிரச்சினையையும், ஆளும் கட்சியின் தன்மையையும், எதிர்க்கட்சிகளின் உண்மையான நோக்கத்தையும் அவற்றின் போக்கையும் இவற்றிற்குப் பின்னுல் பௌத்த நிறுவனங்களின் பலம், அவை அரசியற் கட்சிகளால் பயன்படுத்தக் கூடிய விதம் என்பன பற்றி ரொமேஷ் பண்டாரி சரியான விளக்கங்களைக் கொண்டிருக்கவில்லையெனத் தோன்றுகிறது. அத்துடன் ரொமேஷ் பண்டாரி அமெரிக்க சார்பாளர் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கை அரசின் வாய் ரீதியான வாக்குறுதிகளை நம்பி விடுதலைப் போராட்ட இயக்கங்கள் மீது கடினப்போக்கை ரொமேஷ் பண்டாரி கையாண்டார்.

பார்த்தசாரதி கைக்கொண்ட கொள்கையில் இருந்து இது வித்தியாசமான கொள்கையாக அமைந்திருந்தது. பார்த்தசாரதியின் கொள்கை இந்தியா இலங்கைக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்யக்கூடாதென்பதும் இந்தியா தனது ஸ்திரத் தன்மையையும், விட்டுக் கொடுப்பற்ற உறுதியையும் வெளிப்படுத்திக் கொண்டு இந்தியாவின் திட்டப்படி இலங்கையை நடக்கச் செய்தல் என்பதுமாகும். அதாவது இரண்டு சமதையான அரசுகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுக்களாக அல்லாமல் குருவுக்கும் சிஷ்யனுக்கும் இடையிலுள்ள உறவு என்ற பாங்கில் இந்தியா இலங்கை அரசுடன் நடக்க வேண்டும் என்பதாய் அமைந்திருந்தது. ஆனல் ரொமேஷ் பண்டாரி வகுத்த கொள்கை இதற்கு மாருனது. இரு சமதோழர்கட்கு இடையிலான உறவுபோல இலங்கை அரசுடன் உறவைக் கொள்ளும் திட்டத்தை உருவாக்கினுர்.

அதேவேளை விடுதலை இயக்கங்களுடனுன உறவில் எஜமான் சேவகன் என்ற மனப்பாங்கைக்கேப் பிரதிபலித்தார். இயக்கப் பிரதிநிதிகளை அச்சுறுத்தல், அல்லது அவமதிக்கும் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார். ரொமேஷ் பண்டாரியின் இத்தகைய போக்குகளை இயக்கப் பிரதிநிதிகள் எதிர்த்தனர். ரொமேஷ் பண்டாரியின் ஆத்திரம் அவர்களை நாட்டை விட்டே தெளியேற்றும் வரை சென்றது. இப்படி எல்லாம் ரொமேஷ் பண்டாரி நடந்து கொண்ட போதிலும் இலங்கை அரசு ரொமேஷ் பண்டாரிக்குக் கைகொடுக்கத்தவறியது. ரொமேஷ் பண்டாரியை இலங்கை அரசு நடுக்கடலில் கைவிட்டதுபோல தனது திட்டங்கள் எதனையும் நிறைவேற்ருது ஏமாற்றியது வாய் வாக்குறுதிகளை இலங்கை வாயாலேயே மறுத்துவிட்டது.

இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதில், கையாண்ட விதத்தில் ரொமேஷ் பண்டாரிக்கு ஏற்பட்ட தோல்வி அவரை இந்தியாவின் இராஜதந்திரிகள் வரிசையில் இருந்து விலக்கி விட்டது. ரொமேஷ் பண்டாரியைத் தவிர வேறு எந்த ஒரு பெரும் நிபுணர்தானும் இப்பிரச்சினையைக் கையாண்டிருந்தாலும் இப்பிரச்சினையைச் சமாதான ரீதியாகத் தீர்த்து வைத்தல் என்பதிற் தோல்வியே கண்டிருப்பார். ஏனெனில் பிரச்சினையின் சூழ்நிலையும் அதன் தர்க்கபூர்வ வளர்ச்சிப் போக்கும் அவ்வாருனது. ஆனுல் ரொமேஷ் பண்டாரிக்கு ஏற்பட்ட தோல்வி இங்கு எந்த வகையிலெனில் பிரச்சினையைக் கையாண்ட விதத்திலேயாகும். இந்தியாவின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலும் விடுதலை இயக்கங்களைப் பகை கொண்டதுமட்டுமன்றி அவர்களை ஆத்திரமூட்டிய வகையிலும் ஒரு முதிர்ச்சியின்மை அவரது இராஜதந்திரத்தில் வெளிப்பட்டது. இராஜதந்திர வரலாற்றில் இந்திய அரசின் இராஜதந்திரி ஒருவரை இலகுவாகத் தோற்கடித்தவர் என்ற இடம் ஜே. ஆருக்கு உண்டு.

ரொமேஷ் பண்டாரியின் இராஜதந்திர நடவடிக்கைகளை இந்தியப் பத்திரிகைகளும் இராஜதந்திர வட்டாரங்களும் காரசாரமாகக் கண்டித்தன. ஜே. ஆர். தனிமனித ஆணவமும் பழிவாங்கும் சுபாவமும் கொண்டவர். இந்த வகையில் இப்பேச்சுவார்த்தையின் மூலம் ஜே. ஆர். ஜெயவர்த்தனுவைப் பார்த்தசாரதி ஒரு சிஷ்யப்பிள்ளை போலவே நடத்தியிருந்தார். பிரச்சினையைக் கையாள்வதற்கு பார்த்தசாரதி வகுத்திருந்த அடிப்படை அணுகுமுறையாக இது அமைந்தது. இதற்காக பார்த்தசாரதியைப் பழிவாங்கும் நோக்கத்துடன் இப்பிரச்சினையைக் கையாள்வதிலிருந்து அவரைத் தான் நிறுத்திவைக்க [illegible] ஜே. ஆர். [illegible] வகையில் தன்னுல் பார்த்தசாரதியை அரங்கத்திலிருந்து அகற்ற முடிந்தது என்பதைக் காட்டினுர். ஜே. ஆர். தன்னுடைய இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் ரொமேஷ் பண்டாரி என்பவர் அவருக்கு வாய்ப்பாக அமைந்தார். ஜே. ஆர். சமூகத்திற்காக எதனையும் இதிற் சாதிக்காது போனுலும் தனது தனிமனித ஆத்திரத்தை இதிற் தீர்த்திருக்கின்ருர். இவ்வாறு ஜே. ஆர். தனது ஆத்திரத்தைத் தீர்க்கக்கூடிய நிலைக்கு ரொமேஷ் பண்டாரி பொறுப்பாவார்.

### பார்த்தசாரதி ராஜிஞமா

இத்தகைய நிலையில் பார்த்தசாரதி தனது பதவியிலிருந்து இராஜிஞமாக் கடிதத்தைக் கையளிக்குமளவிற்கு அவரது வேதனை சென்றிருந்தது.

ஜே. ஆர். பொய்யான ஒரு தற்காலிக வெற்றியை ஈட்டினுர் என்பது உண்மை. திம்பு பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்தது. விமா[illegible] தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. மொசாட், எஸ். ஏ. எஸ் போன்ற உலக தீய சக்திகளின் துணையுடன் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்தன. தமிழ் மக்கள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டால் இது இந்தியாவிற்கே பெரும் தோல்வியாக அமையும். எதிர்காலத்தில் இலங்கை தான் நினைத்தவாறு இந்தியாவிற்கு எதிராக நடந்து கொள்ளக்கூடிய தன்மையைப் பெற்றுவிடும். இந்நிலையில் இலங்கையின் இத்தகைய தாக்குதல்களை அனுமதிப்பதன் மூலம் இந்தியா இலங்கையில் தனது நலன்களை மொத்தமாக இழக்கவேண்டி ஏற்பட்டுவிடும்.

எனவே இலங்கை அரசின் இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக இந்தியா வன்மையான கண்டனங்களை வெளியிட்டது. இத்தகைய தாக்குதல்களை நிறுத்துமாறு கண்டிப்பான குரலில் இந்தியா கூறியது. இந்தியாவிற்கு அருகில் இருந்து கொண்டு ஒரு எல்லையை மீறிச் செயற்பட முடியாதென்பதை இலங்கை அரசு கருத்திற் கொள்ள வேண்டி ஏற்பட்டது. இஸ்ரவேல் — அரபு நாடுகளின் சூழலில் இருந்து இலங்கை - இந்தியச் சூழல் வேருனது. இஸ்ரேல் காலத்திற்குக் காலம் எகிப்து உட்பட அரபு நாடுகளைத் தோற்கடித்தது மட்டுமன்றி பிறநாடுகளான அரபு நாடுகளில் உள்ள பாலஸ்தீன அகதி முகாம்கள் மீது தாக்குதல்களை நடத்தக் கூடியளவிற்கு வல்லமையுள்ளதாகவும், உள்ளது. இத்தகைய போக்கை இந்தியாவிற்கு எதிராக இலங்கையால் மேற்கொள்ளல் இலகுவில் சாத்தியப்பட முடியாது. பியபிராவில் Biatra மக்கள் அழிக்கப்பட்டது போலவோ அன்றி செவ்விந்தியர்களை இன்றைய அமெரிக்கர்களின் மூதாதையர் அழித்தது போலவோ இலங்கைத் தமிழ் மக்களை இலகுவாக அழித்துவிட முடியாது. இலங்கையரசு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையைத்தான் மேற்கொள்ளலாமே தவிர தனது எண்ணப்படி செயற்பட முடியாது.

பார்த்தசாரதி மீண்டும் இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதற்கான பொறுப்பை எடுத்ததும் சில புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கை அரசும் தனது வரையறைகளைஉணர்ந்து கொண்டது. பார்த்தசாரதி தனது முன்னைய திட்டத்தையே மீண்டும் தனது செயற்பாட்டின் அடிப்படையாகக் கொண்டார். ஆனல் இந்திராகாந்தி பதவியில் இருந்தபோது காணப்பட்டபலத்திலிருந்து தற்போது இந்தியாவின் பலம் குறைவானதாகவே உள்ளது. அதாவது இந்திராகாந்தி பதவியில் இருந்தகாலத்தில் இருந்த இராணுவபலத்தை விட இன்று இந்தியாவின் இராணுவபலம் அதிகரித்திருக்கலாம். ஆனல் இந்திராகாந்தி இருந்தபோதிருந்த அரசியல் ரீதியான ஆளுமைப் பலம் தற்போது குறைவானது. எனவே பார்த்தசாரதியின் திட்டம் முன்பிருந்ததுபோல அவ்வளவு இறுக்கமாக இருக்க முடியாதென்பது தெளிவு. ஆயினும் தற்போது இந்திய அரசின் இராஜதந்திரம் இந்தியாவின் கோணத்திலிருந்து பார்க்கின்றபோது முன்பிருந்ததைவிடப் பலம் வாய்ந்தது.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்று வளர்ச்சிப்போக்கை அவதானிக்கும்போது சமாதான பூர்வமாக இலங்கையின் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட முடியாதென்பதே உண்மை.

நன்றி:

இலங்கை இனப் பிரச்சினையும் இந்து சமுத்திரப் பிராந்தியமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சிறப்பிதழ்
மில்க்வைற் செய்தி 138

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 மில்க்வைற் பார்சோப் அல்லது
2 சுப்பமில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


# சஞ்சீவி

06 - 06 - 1987 சனிக்கிழமை



ஆதரவாளர்கள் அறிந்தவைதானே.

எங்கள் தயாரிப்புகள் எங்கள் கையிலிருந்து உங்கள் கைக்கு வருவதற்கிடையில் எத்தனை இடையூறுகள் போக்குவரத்துத் துன்பம் எரிபொருள் தட்டுப்பாடு மூலப் பொருள் விலையுயர்வு தொழிலாளர் போக்குவரத்துத் துன்பம் இத்தனை வேதனைகளுக்கு இடையிலும் நாங்கள் உங்கள் தேவைகளைக் கவனிக்கிறோம்.

உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


# தமிழர் விவகாரம் இப்போது இருநாட்டு பிரச்சினை; தீர்வு காண்பதற்கு 3ஆவது நாடு தேவைப்படும்

கவலை, கண்டனம் தெரிவித்த காலம் மலையேறிவிட்டது.

கப்பல், விமானம் அனுப்பும் அளவுக்கு விஷயம் முற்றிவிட்டது.

புதுடில்லி புதிய பாதையில் செல்லவும் ஆரம்பித்துவிட்டது.

இதைக் கண்டு கொழும்புக்குக் கோபம் வந்துள்ளது.

வந்து என்ன பயன்? யாரால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று சிந்தித்துப் பார்க்கக் கூடாதா?

நாமாவது ஆராய்ந்து பார்ப்போமே! ஆண்டுத் தொடக்கத்தில் அமுலுக்கு வந்தது, யாழ் குடா மீதான எரிபொருள் தடை, மற்றும் தடைகள்.

இராணுவ நடவடிக்கைகளையும் கொழும்பு அரசு அப்போதே சிறிது சிறிதாகத் தொடங்கியது. (இலங்கை சிறிய நாடல்லவா!).

இதனால் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேச முடியாத முட்டுக்கட்டை தோன்றியது. முட்டுக்கட்டையை நீக்க புதுடில்லி அரசு 'டிமாஷ்' (Demarche) நோட்டீஸைப் பெப்ரவரி 9 இல் அனுப்பியது.

''பொருளாதார மற்றும் முற்றுகைகளை நீக்கி டிசம்பர் 19 யோசனைகளை ஏற்பதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்; இல்லையேல் வன்செயல்கள் தொடரும்'' — இப்படி 'டிமாஷ்' அறிவித்தல் கூறியது.

இதை தமாஷாக எடுத்துக் கொண்டார்கள் தர்மிஷ்டரும், அவரின் சீடர்களும்.

டிமாஷ் நோட்டீஸுக்கு முன்னர் இலங்கைக்கு இந்தியா இன்னொன்றையும் தெரிவித்திருந்தது.

''வன்செயல்கள் தொடரும் என்றால் பேச்சுவார்த்தைகள் தொடராது'' — என்பது தான் அது.

எல்லாவற்றையும் தூக்கி மூலையில் போட்டுவிட்டு, ''உனக்கும் பேப்பே உன் அப்பனுக்கும் பேப்பே'' என்ற மாதிரி இலங்கை அரசு நடக்கத் தொடங்கியது.

### உபகதையும் உபதேசமும்

இதனிடையில் பிரதமர் காந்திக்கு உபகதைகள் கூறி உபதேசம் செய்ய முயன்றார் தர்மிஷ்டர்.

புத்தபெருமானின் உபதேசம் ஒன்றை ராஜீவுக்கு அவர் சுட்டிக் காட்டினார்.

காஷ்மீர் பிராமணன் தூக்கி எறிந்த குப்பையை புத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் அக்குப்பை பிராமணனுக்கே போய்ச் சேர்ந்தது.

காஷ்மீர் பிராமணனை ராஜீவ் காந்திக்கு ஒப்பிட்டார். புத்தருக்குத் தன்னை ஒப்பிட்டார்.

கடந்த ஏப்ரலில் பிரதமர் பிரேமதாசாவும் இந்தியாவுக்கு தர்மோபதேசம் செய்யத் தொடங்கினார்.

யாழ். குடாநாடு மீது சிறிது சிறிதாக நடத்தி வந்த இராணுவ நடவடிக்கையை, கொழும்பு அரசு சென்ற மாதக் கடைசியில் முழு அளவில் தொடக்கியது.

அப்பாவித் தமிழர் நூற்றுக்கணக்கில் குண்டுவீச்சுக்குப் பலியாகினர்.

இது பற்றி பிரதமர் காந்தி தெரிவித்த கவலையை அவரின் கொழும்புத் தூதர், தர்மிஷ்டரிடம் தெரிவித்தார்.

தர்மிஷ்டரோ 'தாராள மனப்பான்மையுடன்' இந்தக் கவலை, கண்டனத்தை தமிழர் அமைப்புக்களிடம் தெரிவிக்குமாறு பிரதமருக்குக் கூறும்படி இந்தியத் தூதரிடம் கூறினர்.

ஆத்திரம் அடைந்த ராஜீவ் கடும் வார்த்தைகள் கொண்ட கண்டன அறிக்கையை வெளியிட்டார்.

அந்தக் கண்டன அறிக்கையைக் கண்டும் காணாதது போன்று இலங்கை நடந்து கொண்டது.

## பிரச்சினையை வானளாவ வளரவிட்டது யார் குற்றம்?

இந்தச் சட்டத்தில் தான் இந்தியா புதிய பாதைகுறித்துத் தீர்மானித்தது.

### படகுப் பாதை

பாக்கு நீரிணைப் பாதையை முதலில் பார்த்தது.

நிவாரணப் பொருள்கள் கொண்ட படகு அணி ஒன்றை பாக்கு நீரிணையூடாக யாழ் அனுப்பப் போவதாக இந்தியா இலங்கைக்கு அறிவித்தது.

அவ்வளவு தான் சிறிய நாடு, பெரிய நாடு பல்லவியைப் பாடத் தொடங்கினர், பிரதமர் பிரேமதாசா.

தன்னாதிக்கம், சுதந்திரம், ஒருமைப்பாடு என்று கூறத் தொடங்கினர் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

கச்சதீவில் வைத்து இலங்கைக் கடற்படையினர் இந்தியப் படகுகள் அணியைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

விமானம் தாங்கிக் கப்பல் 'விக்ரம்' இல் இருந்து இந்திய அதிகாரி மைத்ரே பேசுகிறார்:

பட்டினியால் வாழும் யாழ் மக்களுக்கு உணவுப் பொருள் கொண்டு வந்து இருக்கிறோம். எங்களை யாழ் செல்ல அனுமதியுங்கள்.

சீனா வழங்கிய பீரங்கிப் படகில் இருந்து ஸ்ரீலங்கா கடற்படைக் கப்டன் சமரசேகரா:

உங்கள் நாட்டில் தமிழ் நாடு மாநிலத்தில்தான் மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள். அங்கு கொண்டு போய்க் கொடுங்கள். உங்கள் படகுகளை எமது கடல் எல்லைக்குள் அனுமதிக்க முடியாது.

நான்கு மணித்தியாலங்கள் நடுக்கடலில் நின்ற பின்னர் இந்தியப் படகு அணி திரும்பிச் சென்று விட்டது.

மறுநாள் காலை இலங்கை வானொலி படகுகள் திரும்பியதை வெற்றித்தொனியில் தெரிவித்தது.

சிறியநாடு பெரிதாகப் பேசிக் குதூகலித்தது.

### வியாழனில் மாறியது

பிரச்சினை வியாழன் மாலையே தலைகீழாக மாறிவிட்டது.

கொழும்புத் தலைவர்கள் இப்போது ஆகாயத்தைப்பார்க்கத்தொடங்கி விட்டார்கள். அகில உலகுக்கும் முறையிடத் தொடங்கியிருக்கிறார்கள்.

பிரச்சினையை வான வெளிவரை வளர்த்து விட்டவர்கள் யார் என்பதை இனியாவது அவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா? இப்போது தான் 'டிமாஷ்' நோட்டீஸின் அர்த்தமே கொழும்புக்குப் புரியத் தொடங்கி இருக்கிறதாம்.

### இந்தியாவின் சொந்தப் பிரச்சினை

'இலங்கைத் தமிழர் பிரச்சினை எனது பிரச்சினை; இந்தியாவின் சொந்தப் பிரச்சினை' இப்படி இலங்கைக்கு அடையாளம் காட்டியிருக்கின்றார், பிரதமர் ராஜீவ்.

இலங்கைத் தமிழருக்காக இம்முறை தமிழ் நாடு வெளிப்படையாக கொந்தளிக்கவில்லை.

நீறு பூத்த நெருப்புப் போல் பாரதமே கொந்தளிக்கின்றது.

பிரதமர் ராஜீவின் ஆளும் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் புதுடில்லியிலே ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள்.

மத்தியஸ்தர் பணியில் இருந்து நீங்கி, இலங்கைத் தமிழர் சார்பில் நியாயம் பேச நேரடியாகப் புறப்படத் தீர்மானித்து விட்டார் பிரதமர் ராஜீவ்.

கப்பல், விமானம்-இரண்டு சம்பவங்களும் இதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

விமானப்படையின் 'கருணைப் பயணம்' (Mercy Mission) யாழ் வந்து திரும்பிய பின்னர் பிரதமர் ராஜீவ் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்தார்.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்களும் பிரதமரும் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கை, ஒன்றை மட்டும் தெளிவாகப் புலப்படுத்தி விட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நாட்டின் ஐக்கியத்துக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் உட்பட்டமுறையில்தீர்வு காணப்படவேண்டும்— இப்படி கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஜனாதிபதிஜெயவர்த்தனவும் பிரதமர் ராஜீவும் திரும்பத் திரும்ப தெரிவித்து வந்த கருத்துக்களுக்கு முரண்பாடானதாக இது அமைந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசமைப்புச் சட்டத்துக்குட்பட்டவாறு தீர்வு காணப்படவேண்டும்—இப்படித்தான் இருவரும் கூறிவந்தனர்.

பிரதமர் ராஜீவ் அந்த நிலையை இப்போது கைவிட்டுவிட்டார். அதைத்தான் அவர் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கை காட்டுகிறது.

### ஏமாற்றியதற்கு பதிலடி

எப்போது இலங்கை அரசு பேச்சுவார்த்தை என்று சொல்லித் தன்னை ஏமாற்றிவிட்டது என்று கண்டித்து அறிக்கைவிட்டாரோ, அன்றே 'இலங்கையின் தற்போதைய அரசமைப்புக்குட்பட்ட தீர்வு' என்ற நிலையை ராஜீவ் கைவிட்டுவிட்டார் என்றே கூறவேண்டும்.

இப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினையாகிவிட்டது.

### பரிமாணம் மாறியது

இரண்டு நாடுகளையும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து, பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி ஐ. நா. பொதுச் செயலாளர் நாயகமே இப்போது கூறிவிட்டார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் மூன்றாவது நாடு ஒன்று மத்தியஸ்தம் செய்யவேண்டிய அளவுக்கு இலங்கைத்தமிழர் பிரச்சினையின் பரிமாணம் மாறிவிட்டது.

இப்போது—

இலங்கை அணியில் நிற்கும் நாடுகள் எவை?

இந்திய அணியில் நிற்கும் நாடுகள் எவை?— இந்த விவரங்கள் எல்லாம் இப்போது வெளியாகிக்கொண்டு இருக்கின்றன.

சோவியத்யூனியன் இந்தியநிலையைப் பாராட்டியிருக்கின்றது. இந்த நிலையில் அடுத்து நடைபெறப்போவது என்ன?

இந்தக்கேள்வி கொழும்பில் மட்டும் அல்ல, உலகிலேயே இன்று எழும்பியிருக்கின்றது. ★

## ஜூன் 5 ஆம் திகதிக்கு துக்கதின முக்கியம்

நேற்று ஜூன் 5 ஆம் திகதி—

ஸ்ரீலங்கா அரசு சிங்களப் பகுதிகளில் நேற்றுத் தேசிய துக்க தினத்தை அனுஷ்டித்தது.

புத்த பிக்குகள் உயிரிழந்ததற்காக ஸ்ரீலங்கா அரசு தேசிய துக்க தினத்தை அனுஷ்டித்தது.

ஆனால் இலங்கைத் தமிழினம் ஜூன் ஐந்தாம் நாளை துக்க தினமாக கறுப்புக்கொடி கட்டி அனுஷ்டித்து வந்தது, தமிழர் விடுதலைப் போராட்டம் வீறு பெறும் வரை.

ஆம். 1956 ஜூன் 5 உண்மையிலேயே தேசிய துக்கதினம்.

தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தினம்.

தமிழனின் அஹிம்சைப் போராட்டம் ஆரம்பமான தினமும் அன்று.

'இரு மொழிகள் ஒரு நாடு; ஒரு மொழி இரண்டு நாடு'— என்று அரசியல் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்லா கூறியதும் அன்று தான்.

இனப்பிரச்சினை முற்றி இந்திய யுத்த விமானங்கள் இலங்கை ஆகாயப் பிராந்தியத்தை ஊடுருவிய மறுநாளை (வெள்ளி)—

ஸ்ரீலங்கா அரசு தேசிய துக்கதினமாக பிரகடனப் படுத்தியது. தேசிய துக்கத்துக்கு காரணமாக இருந்து வருவது 1956 ஜூன் ஐந்தில் இயற்றப் பட்ட சிங்களச் சட்டம்.

31 ஆண்டுகளின் பின்னர் ஜூன் 5 ஐ தேசிய துக்கதினமாக (காரணம் வேறாக இருந்தாலும்) பிரகடனப்படுத்தியது பொருத்தமாகஅமைந்து விட்டது அல்லவா!

தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக தியாகி கந்தசாமி சுட்டுக் கொல்லப்பட்டதும் ஜூன் 5 ஆம் திகதி தான்! ★

## மக்கள் அகதிகளாக தஞ்சம் புகும்போது இறைமையும் தஞ்சம்!

சிறியநாடு, பெரிய நாடு, தன்னாதிக்கம் சுதந்திரம், ஒருமைப்பாடு—

இவை பற்றி இப்போது கொழும்பு பெரிதாகப் பேசத் தொடங்கி விட்டது.

★ முதலாவது சிறிய நாட்டை பெரிய நாடு பயமுறுத்தலாமா?

இந்தியா பெரியநாடு. இலங்கை சிறிய நாடு. இது மறுக்க முடியாத உண்மை. இரண்டும் அண்டை நாடுகள்.

பெரியநாட்டில் பிறந்த புத்தம் தான் சிறியநாட்டின் உத்தியோக மதம்.

சிறிய நாடு, பெரிய நாட்டின் எதிரிநாடுகளுடன் சிநேகம் வைத்து உள்ளது.

அந்த நாடுகளிடம் இருந்து ஆயுதம் வாங்குகின்றது. எதிரிநாடுகள் சிறியநாட்டைப் பயன்படுத்தி பெரியநாட்டுக்குத் தொல்லை கொடுக்கத் தீர்மானித்துள்ளன.

இந்த நிலையில் சிறிய நாடு, சிறிய நாடு என்று சொல்லக்கூடியமாதிரியா நடந்து கொள்கின்றது?

இப்படி அந்தப் பெரிய நாடு கேட்கிறது.

''இறைமை, சுதந்திரம் சிறிய நாட்டுக்கு உண்டு. நான் நினைத்த மாதிரி எந்த நாடுகளுடனும் தொடர்பு கொள்ளமுடியும்—'' இப்படி சிறிய நாடு கூறுகிறது.

சிறியநாட்டின்இறைமைக்குப் பங்கம் ஏற்படாது காக்கவேண்டியது அருகில் உள்ள பெரிய நாட்டின் கடமை அல்லவா!

ஆனால் அந்தப் பெரிய நாட்டின் எதிரி நாடுகளுடன் தொடர்பு வைத்திருக்கும் சிறிய நாடு, அதன் இறைமையை பெரியநாடு பாதுகாக்க வேண்டும் என்று கோருவதற்கு உரிமையுண்டா? இப்படிப் பெரிய நாடு கேட்டால் சிறியநாடு என்னபதில் கூறமுடியும்?

★ அடுத்தது நாட்டின் தன்னாதிக்கம், சுதந்திரம் ஒருமைப்பாடு பற்றியது.

ஒருநாட்டின் இறைமை சுதந்திரம் அந்தநாட்டின் பிரச்சினைகள் அந்த நாட்டின் எல்லைக்குள் இருக்கும் வரையும் தான்.

நாட்டுப் பிரச்சினைகள் அந்த நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குள் சென்று விட்ட பின்னர், இறைமை, சுதந்திரம் பற்றி அந்த நாடு பெரிதாகப் பேசுவதற்கு முடியுமா?

ஒரு நாட்டில் வாழும் ஒரு பிரிவு மக்களின் மனித உரிமைகள் மீறப்படும் போது இறைமை, சுதந்திரம் பற்றி பேசிக் கொண்டு இருக்க முடியுமா?

நாட்டின் இறைமை, சுதந்திரம் என்பவை அந்த நாட்டு மக்கள் மனித உரிமைகளுடன் அமைதி வாழ்வை மேற்கொள்ளும் வரையும் தானே?

அந்த நாட்டில்வாழும் இரண்டு இனங்களில் பெரிய இனம் சிறிய இனத்தின் மனித உரிமைகளை நசுக்கி, பறிக்கும் போது, பெரிய இனம் நாட்டின் இறைமை, சுதந்திரம் பற்றிப் பேசுவது நியாயமா?

அந்த சிறிய இனமும் நிம்மதியாக வாழும் போது தானே நாட்டின் இறைமை பூரணமாக இருக்க முடியும்?

அடக்குமுறையை சகிக்க முடியாமல் சிறிய இனம் அண்டையில் உள்ள பெரிய நாட்டில் அடைக்கலம் புகும் போது நாட்டின் இறைமையும் சேர்ந்தே அடைக்கலம் புகுந்ததாகக் கருதக் கூடாதா?

கடந்த புதன் நள்ளிரவு நடுக்கடலில் நின்று இறைமை, சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு பற்றி பேசியவர்கள் இக்கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்! ★

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்களும் இன்று நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி.சிவமகாராசாகேட்டுள்ளார்.

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

மாணவர் இளைஞர் பொதுமன்றம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நேற்றும் இன்றும் நாளையும் நடத்தவிருந்த ஓவியக் கண்காட்சி ஒத்திபோடப்பட்டுள்ளது. (உ)


சின்னஞ்சிறு விளம்பரம்

### இடம் மாற்றம்

வாசகர்களின் பாதுகாப்புக் கருதி ராஜன் புத்தகசாலையின் அறிவிப்பு. எமது நிலையம் கீழ்க்காணும் முகவரியில் இயங்குகிறது. வாடிக்கையாளர்கள் அனைவரையும் உடனடியாக தொடர்பு கொள்ளவேண்டுகிறோம். ''ராஜன் அகம்'' பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. பஸ் ரூட் 764. (தபால்பெட்டியடி) 1409


### இலங்கை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிக்கு உத்தரவிட்டுள்ளது.

இதனிடையில் இலங்கை இந்த விஷயத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் சென்றால் கடும் கண்டனங்களையும் விவாதங்களையும் எதிர்நோக்க வேண்டி வரும் என்று இந்திய இணை அமைச்சர் நட்வர் சிங் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என்று இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது. (உ-எ)

### 3000 இளைஞர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமதுபிள்ளைகளை வேண்டும் என்று அவர்கள் கேட்டனர்.

இராணுவத்தினர் பல பிரிவுகளாகச் சென்று தத்தம் எண்ணப்படி இளைஞர்களை கைது செய்துபூஸாவிற்குஅனுப்பினர் என்றும், அதனாலேயே விவரம் எதுவும் அவர்களிடம் இல்லை என்றும் தெரியவருகிறது.

இதேவேளை க.பொ.த உயர்தர, சாதாரணம் பயிலும் மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், திருமணமானவர்கள் ஆகியோரையாவது விடுதலை செய்யுமாறு அரச அதிபர் இராணுவத்தினரைக் கேட்டுக் கொண்டார்.

எனினும் அவர்கள் அது குறித்துச் சாதகமான பதில் எதையும் தெரிவிக்கவில்லை.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தர மாணவர்களே என அறியப்படுகிறது. (அ-எ-7)

## வவுனியாவிலிருந்து உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

அரிசி, கோதுமை மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வவுனியாவிலிருந்து தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதற்கான வழங்கற் கட்டளைகளும் ஏனைய அனுமதிப் பத்திரங்களும் யாழ். செயலகத்தில் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி சி. பற்குணத்தினால் இன்று காலை வழங்கப்படவுள்ளது.

வவுனியா செல்ல விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட வழங்கற் கட்டளைகளுடன் பொருள்களைப்பெற அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரை யாழ் செயலகத்திற்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றன.

லொறிச் சாரதியினதும், பிரயாணம் செய்யும் ஏனைய ஊழியர்களின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள் பற்றிய தகவல்களும் கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

### நிவாரண...-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் இம்மாதம் 17 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற உள்ளது.

வெளியுறவுச் செயலாளர்கள் நான்கு தினங்களுக்கு முன்னர் கூடி ஆலோசனை நடத்த உள்ளனர்.

இக்கூட்டங்களின் போது இருதரப்புப் பிரச்சினைகள் குறித்து உத்தியோகப் பற்றற்ற முறையில் பரிசிலனை செய்ய வாய்ப்பு உண்டு.

—இப்படி அமைச்சர் நட்வர்சிங் சொன்னார். (உ-எ)

### நிதானத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் ஐ. நா. பிரதிநிதி நேற்றுக் காலை ஐ. நா. பொதுச் செயலாளரைச் சந்தித்து இந்திய நிலைப்பாட்டை விளக்கினார்.

### பிணக்கை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விசாரிக்க முடியாது.

ஆகவே பிரதமரின் கோரிக்கை பலன் அளிக்கும் சாத்தியம் இல்லை, — இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் பிரதமர் ராஜீவ் காந்தி என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)


## இடம் மாற்றம்

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக மக்கள் பாதுகாப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைஸ்ஸ்
இல, 272 (352), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(2850)

## அறிவித்தல்

### ஷப்ரு நிதி நிறுவனம்

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மானிப்பாய் அலுவலகங்கள் திங்கள்(08.06.87)முதல் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 2.30 மணி வரை அலுவலக வேலைகளுக்காகத் திறந்திருக்கும்.

JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai.

கல்வி ஆண்டு 87/88

புதிய தொழிற்கல்வி, தொழில்நுட்ப டிப்புளோமா பயிற்சி வகுப்புகளுக்கு சேர விரும்பும் இளைஞர்களும், யுவதிகளும் 12-6-87 வரை விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப்பரீட்சை — 12-6-87 வெள்ளிக்கிழமை 9-00 மணிக்கு காரியாலயத்தில் நடைபெறும்.

– பணிப்பாளர்



இப் பத்திரிகை நியூ உதயன் ஸ்பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 06-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Saturday June 06, 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org